1563

No. M. 2210. வருஷ சந்தா ரூ-1-8-0.

...ரியர் : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

JAGANMOHINI

மலர் V.] [இதழ் 3

OFFICE OF THE REGISTRAR OF ...
8-MAR 1928
MADRAS

தனிப் பிரதி அணா 3.

x
ᛁᛁᛃ2H,N22J M
N28·5·3.
182843

ஜகன் மோகினி ஆபீஸ்.

20, தேரடித் தெரு, :: திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

ஐந்தாவது ஆண்டு. ஐந்தாவது ஆண்டு.

ஜகன்மோகினி

இது ஒரு சிறந்த மாதாந்த நாவல் பத்திரிகை. இதன் 5-வது ஆண்டு 1927௵ டிசம்பர்௴ முதல் ஆரம்பம். இவ்வாண்டில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் இயற்றப்பட்ட "ராதாமணி" என்னும் அருமையான துப்பறியும் நாவலும், ஹாஸ்யவிநோதங்களும், வேறு சில விஷயங்களும், காவியங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச்சந்தா உள்நாடு, வெளிநாடு இரண்டிற்கும் ரூபாய் 1—8—0.

பத்ம சுந்தரன்

இதில் மேனாட்டு நாகரிகத்தின் ஆடம்பரமும், முடிவில் அதனாலடையும் துன்பங்களும், பண்டைக்கால பழக்கத்தின் பெருமையும், கதாநாயக நாயகியின் ஒவ்வொரு அம்சத்தின் உயர்ந்த நோக்கமும், காதலின் திறமையும், துப்பறிபவரின் விசித்திரமான செய்கைகளும், செல்லப்பாவின் துயரமும், அவன் தன் தீயொழுக்கத்திலிருந்து உடனே திருந்துவதும், அவனது பெற்றோரின் நிலைமையும், மணத்தக்காளியம்மாள், சுண்டைக்காயம்மாள், அழுமூஞ்சி அண்ணாவி இவர்களின் ஹாஸ்ய ரஸப் பிரதானமான செய்கைகளும் : இன்னுமற்ற ரஸபாவங்களும் படிக்கப் படிக்க சலிப்பென்பதே தராமல் ஆநந்திக்கச்செய்யும். சித்திரப் படங்களுடன் கூடியது.

விலை ரூபாய் 2—8—0.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை.

உ

ஓம்

ஜகன் மோகினி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
-MAR 1928
MADRAS

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மேய்யுணர் வில்லா தவர்க்கு
ஜகன்மோ கினியேன்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து

மலர் V	பிரபவஹு மாசிமீ February 1928.	இதழ் 3

கடவுள் வணக்கம்

ஆநந்தக் களிப்பு மெட்டு.

21. சக்கர ஹஸ்த மருந்து—உயர்
முக்கண்ணன் தேவிக்கு மூத்த மருந்து
லக்குமிநாத மருந்து—அஷ்ட
திக்கெங்கும் ஜோதியாய் நிற்கும் மருந்து
22. கஞ்சனைக் கொன்ற மருந்து—பெரும்
குஞ்சரத்தின் இடர் கொய்த மருந்து
சஞ்சலம் போக்கும் மருந்து—தொண்டர்க்
கஞ்சா தபயமளிக்கும் மருந்து
23. காமனை ஈன்ற மருந்து—பக்தசு
தாமன் வறுமையைத் தகைத்த மருந்து
பாமைக்குகந்த மருந்து—அதிப்
ரேமையுட னுலகாளும் மருந்து
24. வெண்ணெயை யுண்ட மருந்து—எழில்
கண்ணனென நாமம் கொண்ட மருந்து
மண்டனையுண்ட மருந்து—வாயில்
அண்ட மெல்லாம் காட்டி யாண்ட மருந்து
25. சாபத்தை யேந்தும் மருந்து—பெண்ணின்
சாபத்தைத் தீர்த்த தயாள மருந்து
பூபதியான மருந்து—பக்தர்
ஆபத்தை நீக்கும் அரிய மருந்து
26. தாசரைக் காக்கும் மருந்து—ராம
தாசர் துதிக்க வந்தாண்ட மருந்து
கேசவ நாம மருந்து—பார்த்தன்
மாசற ஞானமளித்த மருந்து
27. திருவல்லிக்கேணி மருந்து—திருத்
தொண்டர்கள் பாடித் துதிக்கும் மருந்து
இருவினை போக்கும் மருந்து—அது
நறுமலர்க் கோதையின் நாத மருந்து.

வை. மு. கோ.

அநுபவ நீதிசாரம்.

(16) அண்ணனைக் காணவும் ஆகாது. அண்ணியைக் காணாதிருக்கவும் போகாது.

(17) பெண்டாட்டிக்குப் பெட்டிப் பாம்பு. பெற்றோருக்குச் சீறிய பாம்பு. என்னே விசித்திரம்!

(18) மாமிக்கு மறைத்துப் கொடுப்பது மிட்டாய். தாய்க்குத் தெரிந்து கொடுப்பது தம்பிடியே.

(19) விருந்துண்ணப் போகத் தயார் தான். விருந்து செய் என்றால் 'நீ யார்?' தான்.

(20) கலியாண மாப்பிள்ளைக்குச் சொந்த அம்மான், அதிகாரத்தில் முதன்மையாய் அட்டகாசம் செய்கிறான். மாப்பிள்ளைக்கு அம்மான் சம்பாவனை ஓதியிடும்போது அவன் கைநிறைய அக்ஷதைதான் இருக்கும்.

(21) "மாமா! வாருங்கள். தங்கள் தம்பி வீட்டில் இறங்குவீர்களென்றல்லவா நான் போஜனம் செய்துவிட்டேன்" என்று அற்பகுணமுடையவர் சொல்வதைக் கேட்டதும் தான் பட்டினியிருந்தாவது 'நான் சாப்பிட்டாயிற்று' என்று மறுமொழி கூறுவதுதான் அழகு.

(22) தன் பெண்ணுக்கு வரிசை செய்யும்போது, தான் பெருத்த சம்சாரி; செய்வதற்கு முடியாது. நாட்டுப் பெண்ணின் பெற்றோருக்கு டஜன் குழந்தைகளிருப்பினும் அவர்கள்மீது புகார்தான்.

(23) பிச்சைக்காரன் பரிதாபத்திற் களிக்கக் காலணாக் காசில்லை என்ற க்ஷணமே தன் வீட்டிற்குவரும் பணக்காரக் குழந்தையின் கையில் மிட்டாய் பொட்டளம் எவ்விதமோ வந்து உட்காருகிறது.

(24) பக்கத்து வீட்டுப்பெண் பி. ஏ. படிக்கின்றதைச் சில வருஷத்திற்கு முன் பரிகஸித்த அம்மாளின் மகள் வைத்தியக் கல்லூரியில் படிப்பது சகஜத்திலும் சகஜமாய்விட்டது.

(25) அக்காளின் பெண் விவாகமானபின்பு சாந்தியாவதற்குள் தன் கணவனுடன் பேசியதைப் பரிகஸித்தாள். தன் பெண் விவாகமாகு முன்பே பேசிப்பழகி மணந்தது சால நன்றாம்.

(26) நாத்தியின் பெண் நலங்குறைவாம். ஐயாயிரம் ரூபாய் வரதக்ஷணையுடன் வந்த அயல்பெண் செவிடாக விருந்தும் சிலாக்யமாய் விட்டதாம்.

(27) தன் வீட்டுச் சமையலைப்பற்றி பிறரிடம் 10 வகை சொல்லும் மனிதர் உண்ணும்போது தற்செயலாய்ப் பார்த்தால் ரசமும் அன்னமுந்தான் இருக்கும்.

(தொடரும்.)

வை. மு. கோ.

முக்கிய அறிவிப்பு.

நமது சஞ்சிகை நாவலையே முதன்மையாகக்கொண்டு வெளிவருவதென்பது நேயர்கள் யாவரும் அறிந்த விஷயம். சில சந்தா நேயர்களின் விருப்பப்படி சில பொதுவிஷயங்கள், ஹாஸ்யம் பாடல், நீதிசாரம் முதலியன பிரசுரிக்கப்படுகின்றன. சிலர் பலவித வியாசமும், ஹாஸ்யமும் விடுகதைகளும் அனுப்பிப் பிரசுரிக்கும்படி எழுதுகிறார்கள். அவற்றில் ஒன்றை பிரசுரித்து ஒன்றை விலக்கினால் மனஸ்தாபம் நேரிடும். ஆகையினால் இதரவிஷயம் எதுவும் போடப்படமாட்டாது. தயவுசெய்து அனுப்பவேண்டாமென தெரிவித்துக் கொள்கிறோம். இதற்காக மன்னிக்கவும்.

182843

ஸ்ரீ நம்மாழ்வார் துதி.

(சென்ற வருஷம் 12-வது சஞ்சிகையின் தொடர்ச்சி)

3. கல்லாயிருந்ததோர் அகலிகை தன் சாபத்தைக்
காலினால் தீர்க்கவில்லையோ?
கன்றதனால் விளவெறிந்தும் காளியனைப் போக்கடித்தும்
காலிகளைக் காக்கவில்லையோ?
சொல்லற்ற பசுக்களுக்காக ஒரு மலையையே
தூக்கி நீ காக்கவில்லையோ?
தூயபதம் வேண்டியுனை எத்திய துருவன்முன்
தோன்றி நீ யாளவில்லையோ?
வில்லுடன் உனைத்தொழுத குகனுக்குமுன் நீ
மேவியருள் செய்யவில்லையோ?
விளங்கு வேங்கடவரத தேசிகனை யாண்ட நீ
மேவுமெனைக் காத்தலரிதோ?
கல்வியுளார் வாழ்ந்த திருக்கோளூரில்வதரித்துக்
கவிக்கருள் செய்த தலைவா!
கார் மருவு சோலைசூழ் குருகைவரு சக்கரக்
கையனே மகிழ் மாறனே?

4. முடையடர் சிரமேந்தித் திரிந்த அரன் ஹத்திசெல
முன் குருதிபெய்ய வில்லையோ?
முன்னாளில் பத்தியுடைக் கூனிதனக் கருள்செய்து
முதுகதனை நிமிர்த்தவில்லையோ?
அடைய வருளென்றடைந்த விபீஷணர்க்கருள்செய்து
அன்று முடி சூட்டவில்லையோ?
அன்புடன் உனையடைந்த முனிவர் தம் பொருட்டாக
அசுரர்குழாம் துணிக்கவில்லையோ?
சடை யுடையான் முடிமீதுன் அடிதனிலே அர்ச்சித்த
தண்பூவைக் காட்டவில்லையோ?
தத்துவநூல் போதித்தும் சாரத்தியம் செய்துமன்பன்
தனஞ்சயனைக் காக்கவில்லையோ?
கடைந்து கடல்தன்னையன்று வானவருக் கமுதளித்தாய்
காத்தலடியேனையரிதோ?
கார்மருவு சோலைசூழ் குருகைவரு சக்கரக்
கையனே மகிழ் மாறனே!

5. முன்னமோர் அரியாய் வந்துநித்திரணியனை
முனிந்துகிரால் கிழிக்கவில்லையோ?
முக்திசெலச் சபரிக்கு அருள்செய்து அவள் கையால்
முன் அமுதுசெய்யவில்லையோ?
மின்னுமணிமாடங்கள் உனையடைந்த குசேலர்க்கு
விளங்கவருள் செய்யவில்லையோ?
வென்றியுடை ஏனமதாய் அன்றுலகை யிடந்ததையுன்
கோட்டிலே வைக்கவில்லையோ?

மன்னவனுக்கருள் புரிந்து மராமரங்களேழெய்து
வாலியையும் கொல்லவிலையோ?
மானிலத்தை ரக்ஷிக்க வயிறுதனிலே யடக்க
மற்றுமருள் செய்யவிலையோ?
கன்மமொழி தமிழ்வேதம் காசினிக்கு அருள்செய்தாய்
காத்தலடியேனை அரிதோ?
கார்மருவு சோலைசூழ் குருகைவரு சக்கரக்
கையனே மகிழ்மாறனே.

அ. தே. இராமாநுஜ அய்யங்கார்.

ஸ்ரீ நம்மாழ்வார் துதி முற்றிற்று.

மதிப்புரை.

மர்மமுகி

4 படங்களுடன் கூடிய துப்பறியும் நாவல். விலை அணா 12.

ஸ்ரீ வாணி விலாஸ புஸ்தகசாலை, திருப்பாதிரிப்புலியூர்.

மர்மமுகி அல்லது ரசாயனக் கள்ளன் என்னும் இந்நாவலில் கஜபதி என்னும் துப்பறியும் சிங்கம் அம்மாயக் கள்வனிடம் 5, 6 முறை அகப்பட்டுக் கொண்டும், தன்னுடைய தந்திரத்தினாலும் தைரியத்தினாலும் புத்திக் கூர்மையாலும் தப்பித்துக்கொண்டு வருவதானது, வாசிப்போரின் மனதைத் திடுக்கிடும்படிச் செய்கிறது. அம்மாயக் கள்வன் ரசாயனத்தில் நன்ருய்த் தேர்ச்சி பெற்றிருந்தும் அதைத்தீய வழியில் நடத்தியபடியால் கடைசியில் அதுவே அவனுக்குத் தீங்காகவும் உயிருக்கே எமனாகவும் முடிந்தது. கஜபதியோ சத்தியத்தையும் தைரியத்தையும் நம்பிப் பரோபகாரத்திற்காகப் பாடுபட்டு உழைத்தபடியால் அவருக்கு எல்லா ஆபத்திலும் கடவுள் சகாயம் புரிந்து கடைசியில் வெற்றியையும் கீர்த்தியையும் அளித்தார். இந்நாவலில் வரும் ரகஸியக் கடிதம் யாருக்கும் விளங்காமல்போக கஜபதியே தன்னுடைய அபார வல்லமையால் நொடிக்குள் விளங்கும்படி படித்துக்காட்டுவது வெகு அற்புதமாயிருக்கிறது.

பக்தி மார்க்கம்.

ஸ்வாமி பரமாநந்தர் அருளியது. ஸ்ரீமான் R. ராமகிருஷ்ணன் B A. மொழிபெயர்த்தது. ஸ்ரீராமகிருஷ்ணமடம், மயிலாப்பூர். விலை அணா 4.

இப்பெயர்கொண்ட புத்தகம் வரப்பெற்ரோம். உலகத்தில் சகல மனித ராசிகளுக்கு இன்றியமையாத சாதனத்தை அளிக்கக் கூடியது கடவுளிடத்து பக்தியேயாம். "பக்திமார்க்கமே நித்ய சாச்வதமு பவபயமுலேதே ஓ மனஸா" "ஜன்மமேந்துகு பக்திலேனி நர" என்றும் பக்தியைப்பற்றி ஆன்ரோர் பாடியுள்ளாரன்ரோ! அப்பக்தி விஷயமாக மொழிபெயர்க்கப்பட்ட இந்நூலானது யாவரும் படித்துப் பயனடையும் வண்ணம் அமைந்திருக்கிறது. இத்தகைய பக்திமார்க்க நூலை எனையோரும் ஆர்வத்துடன் ஆதரித்துப் படித்துப் பயனடைவதுடன் இதன் ஆசிரியருக்கும் இதுபோன்ற அரிய நூல்களை வரையும்படியான ஊக்கமளிப்பார்களென்று நம்புகிரோம்.

ஹாஸ்யக்கதை.

முள்ளங்கிச் சாலையில் அநேக தட்டிகளாலும் சப்பாத்துக் கள்ளிகளாலும் கட்டப்பட்ட அதி உன்னதமான கட்டடத்திற்குள் வாசலில் ஒரு பலகை தொங்கிக் கொண்டிருந்தது. அப்பலகையிலோ எலிபெண்டரி ஹைஸ்கூல் என்று எழுதப் பெற்றிருந்தது. அக்கட்டடத்தில் ஒரு பெரு வாத்தியார் எருமுட்டை ஆசனத்தில் உட்கார்ந்தபடி பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டேயிருந்தார். அவ்வாத்தியாரை எலிபெண்ட் டீசர் என்றும் உருளைக் கிழங்கு டீசர் என்றும் சொல்லுவார்கள். அவர் பார்ப்பதற்கு யானைக்குட்டிபோலிருப்பார். அவர் தலையோ ஆட்டுத்தலை போலிருக்கும். நெற்றியில் ரோட் போல் இரண்டு நரம்புகள் தூக்கிக்கொண்டிருக்கும். கண் எலிக்கண். வாய் மணி பர்சு. காது முயல் காது அதுவும் செவிடு. மூக்கு வெண்டக்காய்போல் வளவளவென்று ஒழுகிக்கொண்டிருக்கும். அவர் படித்தது L. T. அல்லது பல்டிக்கு பாஸ்பண்ணி இன் பெண்டு அல்லது எலிபெண்டு டீசராயிருந்துகொண்டு 3 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்.

வாத்தியார் :—“ அடா திம்மா ! யானை உருவத்தில் எப்படியிருக்கும்.

திம்மன் :—யானை தங்களைப் போல்தான் இருக்கும். ஆனால் தங்களுக்கு வாலும் தும்பிக்கையும் குறைவு. அதற்கோ அவ்விரண்டும் இருக்கும்.

உருளைக்கிழங்கு வாத்தியார்:—(தனக்குள்ளாகவே) நமக்கோ காது செவிடு. இப்பிள்ளைகள் சொல்வதோ ஒன்றும் புரியவில்லை என்ன செய்வது? எல்லாவற்றிற்கும் சரி என்பதே தகுந்த யுக்தி என்று மனதில் நினைத்துக் கொண்டவராய் “ அடா திம்மா” நீ சொல்வதே சரி என்றார். அதைக் கேட்ட பையன்கள் நகைத்தபடி உட்கார்ந்தார்கள்.

வாத்தியார்—அடா சோத்துராமா ! பாலைவனம் என்றால் என்ன ? அதற்கு ஒரு உதாரணம் சொல்.

சோத்துராமன்—பாலைவனம் என்றால் ஒன்றும் முளைக்காத இடம் அதற்கு உதாரணம் தங்களுடைய வழுக்கைத்தலை.

வாத்தியார்—நீ சொல்வது ரொம்பவும் சரி ; அட தூங்கு மூஞ்சி! பசு மாட்டின் உபயோகம் என்ன ? அது பார்வைக்கு எப்படி இருக்கும் ?

தூங்குமூஞ்சி—“ சார்! மாடு முட்டை இடும். அது மோட்டார் வண்டியை இழுக்கும். அது அக்கா என்று கத்தும். அதன்பால் பச்சை நிறமாய் இருக்கும். பாலைக் கடைந்தால் நெய் உண்டாகும். அதன் வயிற்றில் தொங்கும் கொம்பிலிருந்து பாலைக் கறப்பார்கள். இவைகள்தான் உபயோகங்கள். மாடு பார்ப்பதற்கு யானைபோல் இருக்கும். ஆனால் தும்பிக்கை மாத்திரம் இருக்காது.

வாத்தியார்:—சரி (ஆல்ரைட்) அடா சப்பாணி ! கிளிப்பிள்ளை எப்படி இருக்கும் ?

சப்பாணி:—கிளி பார்வைக்கு காக்கைபோல் வெண்மையாயிருக்கும். அதன் தலையில் இரண்டு கொம்புகள் இருக்கும். அது அம்மா என்று கூப்பிடும். அதன் முதுகில் 3 கண்கள் இருக்கும். அது குழந்தைகளிடம் விளையாடும்.

வாத்தியார் :—சரி வெரிகுட் ! மணியடித்துவிட்டது. எல்லாரும் வீட்டுக்குப்போய் மறுபடி நாளை வாருங்கள்” என்று சொல்லிவிட்டு வீட்டை நோக்கி மாப்பிள்ளை மாதிரி யசைந்தபடி தள்ளாடிக்கொண்டே சென்றார்.

A. கிருஷ்ணபாய்.

சண்பக விஜயம்.

இன்னும் சில அபிப்பிராயங்கள்

"ஜகன்மோகினி" என்ற மாதாந்தப் பத்திரிகையின் ஆசிரியை ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள் அவர்களால் எழுதப்பட்ட சண்பகவிஜயம் என்ற நாவலின் பிரதி ஒன்று வரப்பெற்றோம். இதில் கற்பின் பெருமை, பெண்களின் கடமை, பெரியாரின் பெருமை, நல்லவர்களின் நடத்தை, உத்தமிகளின் இலக்ஷணம் முதலிய விஷயங்களைப்பற்றி நன்கு எழுதப்பட்டிருக்கின்றது. இடையிடையே பல அழகிய சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நடை படிப்பதற்கு இனிமையாகவும், தெளிவாகவும் இருக்கின்றது.

தற்காலம் நம் தமிழ்நாட்டில் பெண்கள் முன்வந்து நூல்கள் எழுதுவது மிகவும் போற்றக் கூடியதாகும். ஸ்ரீமதி கோதைநாயகி அம்மையார் இதுவரையில் பல நாவல்களை எழுதி நம் தமிழ்நாட்டிற்கு உதவியிருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட பெண்மணிகளுக்கு ஊக்கமும் ஆதரவும் அளிக்க வேண்டுவது நம் தமிழ்நாட்டவரின் இன்றியமையாத கடமையாகும்.

நிற்க, சண்பகவிஜயம் என்ற நாவலின் கதைப்போக்கு நன்றாக இருப்பதுடன் இடையிடையே பலநீதிகளும், செய்யுட்களும், மேற்கோள்களும் மிளிர்கின்றன. பொதுவாகக் கூறுமிடத்து இந்நாவல் நம் தமிழ்நாட்டு மாதர்களுக்குச் சிறந்த நீதிகளைப் போதிக்கக் கூடியமுறையில் நன்கு எழுதப்பட்டிருக்கிறது. இச்சிறந்த நாவலை தமிழ்நாட்டார் ஆதரிப்பார்களாக.

"பால விநோதினி"

ஸ்ரீ:

'ஜகன் மோகினி' யின் ஆசிரியர் ஸ்ரீமதி வை. மு. கோதை நாயகி அம்மாள் சமீபத்தில் எழுதி வெளியிட்டிருக்கும் 'சண்பக விஜயம்' என்னும் நவீனகத்தைப் படித்துப் பெரிதும் மகிழ்வெய்தினேன். கதைப்போக்கு செவ்வையாய் அமைந்துள்ளது. கற்பனு சக்தியிற் சிறிதும் சோர்வு புலப்படவில்லை. சந்தர்ப்பத்திற்கேற்ப சுவைகள் பலதிறப்பட்டுப் படிப்போர்க்கு இன்பம் உண்டாகும் வகையில் வரையப்பட்டுள்ளது. கதையிற் கூறிய சம்பவங்கள் இயற்கைக்கு முரண்படாது தொடர்ந்து செல்கின்றன. கதாபாத்திரர்களின் செயலுங் குணமும் படிப்போர்க்குச் சிறந்த பல நீதிகளைப் புகட்டவல்லன. பொருட்செம்மையோ டொப்ப நடையழகும் சொற்பொலிவுங்கொண்டு விளங்கும் இந்நூலைப்போல் சிறந்த நூல்கள் வெளிவரின் இந்தியரும் கதாவிலக்கிப் பயிற்சிமிக்குச் சிறந்த ஆசிரியராக விளங்குதல் கூடும். தமிழுலகிற்கு இத் தொண்டு புரிந்து உபகரித்துவரும் அம்மையார்க்கு அரோகதிடகாத்திரமும் நீண்டவாயுளும் அருளும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

33, வல்லம் பங்காரு செட்டித் தெரு, வேப்பேரி—சென்னை.

பூதூர். அ. பாஷ்யமையங்கார். B.A., L.T.,
27—1—1928.

ஜகன் மோகினியைப் பற்றிய அபிப்பிராயம்.

ஒப்பிலா னொருவ னுயர்திரு வருளைப்
பொற்புற வகத்திற் புனைந்துய் வாமரோ

செந்தமிழ்நாட்டுச் செல்வச்சோதரி ! நம்மால் யாக்கப்பட்டு அச்சுவாகன மழகுடனேறிக் கண்கவர் வனப்புமிக்க ரூபத்துடன் மிளிர்ந்து வந்த "ஜகன் மோகினி" என்னு மெழிலுறு நாமம் புனைந்த பத்திரிகையின் ஐந்தாவதாண்டு முதற் சஞ்சிகை யொன்றைப் பெற்று பெறற்கரிய கழி பேருவகை யெய்தினும். என்னே? அச்சஞ்சிகையினுமத்திற் கியைந்தவாறு, இச்சகத்தையே மோகிக்கச் செய்துவிட்டது—செய்யும்—என்பது அறிவுடையாரெவருமுணர் என்பது வெள்ளிடை மலை. ஆதலின் அவ்வானந்த மேலீட்டினுல் கீழ்க்காணும் பாக்களை யனுப்பியுள்ளோம்.

நீவிர் பல்லாண்டு பல்லாண்டாக வாழ்வீரென்று எங்கும் நிறைந்த பரமனை வேண்டுகிறேம்.

"ஜகன் மோகினியின் சிறப்புப்பா"

வெண்பா

1. வெண்டா மரையுறைவாள் வேட்கைநனி கொண்டுமலர்ச்
செண்டா யணியச் சிகைமிசைமேற்—றண்டா
ஜெகன்மோ கினியென்னச் சீர்கோதை சொற்றூர்
ஜெகன்மோ கமுறச் சிறந்து.

அகவற்பா

2. பன்னல மலியுஞ் சென்னை யம்பதியி
னன்னய மிளிரும் பன்னரு மல்லிக்
கேணியி லுறையும் வாணியை நிகரு
மேதமில் " வை. மு.நற் கோதை நாயகியா "
மேந்திழை மொழியும் இனிய செந்தேனின்
மாரியை யிகலும் சீரிய "ஜெகன்மோ
கினி" யெனத் தீஞ்சுவை நனியுற வழியுங்
கண்டோர் பலருங் கண்டோ? பாகோ?
பண்டே தேவர் கண்டா ரமுதோ?
கரும்போ? வெனவக மிறும்பூ தெய்தச்
சஞ்சிகை யொன்றை நெஞ்க முருகி,
அந்தமி லின்புறாஉஞ் செந்தமிழ் கற்ற
நாவலர் போற்றும் நாவ னடைதழீஇ
கற்புறு கதையும் பொற்புறு கதையுந்
தோஷமி லாப்பல ஹாஸ்யவி நோதமு
நீதி யனுபவ மாதிப் பலவுஞ்
சீருற வியற்றி யேருற வளித்தவிவ்
வம்மையா ரின்னுஞ் செம்மைச் சரிதைகள்
பற்பல யாத்து நற்புகழ் நிறுவி
நைத விலாமல் நாடொறும் வாழ்க.

வாழி வெண்பா

3. நற்கோதை நாயகியு நங்கைஜெகன் மோகினியும்
பற்காதை நாவல்களும் பண்புடனே—பற்காலம்
வாழ்கவிப் பாரினிலே மாசில் புகழ்கொண்டு
சூழ்கவெஞ் ஞான்றுஞ் சுபம்.

இங்ஙனம்,

P. S M. E. Mahamed Yacoob Sahib,
Astrologer. P. S. M. E. & Sons
Younani Ayurveda Medical Store
Kaniyur Post Udamalpet Taluk.
Coimbatore District

16-1-28 }
கணியூர் }

பரிசுகளின் விவரம்.

இரண்டாவது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா நெம்பர்.

394. Mrs. Vedammal, Madura.

2292. Mr. P. R. Manikavelu. M. S. M. Ry Madras.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கும் இதே மாதிரி இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும். பழைய சந்தாதாரர்கள் தங்களது சந்தா நம்பரை அவசியம் தெரிவிக்கக் கோருகிறோம்.

ராவ் பஹதூர் ரஸதுல்லா சாஹிப் அல்லது நிஜப்புளுகன்:— ஸ்ரீமான் வ. கிருஷ்ணசாமி சர்மா எழுதியது.

இது பிறரை ;நாம் வஞ்சித்தால் பிறர் நம்மை வஞ்சிப்பார் என்னும் நீதியைப் போதிக்கிறது. இந்நாவலில் பரிமளநாதர் என்னும் பகட்டுப் பெயர் வைத்துக்கொண்ட டாக்டர் நோயாளிகளைத் தமது படாடோபத்தால் எமாற்றுவதும் கள்ளனுக் கேற்ற குள்ளன் என்னும் பழமொழிக்கிணங்க இவரை, ராவ்பஹதூர் ரஸகுல்லா சாஹிப் என்று விநோதப்பெயர் வைத்துக்கொண்டவர் எமாற்றுவதும் வெகு அற்புதமாயிருக்கிறது. இச்சிறிய நாவல் படிப்பவர்களுடைய புத்தியை நல்லமார்க்கத்தில் கொண்டுபோகத்தக்க விதமாய் அமைந்திருக்கிறது.

4-வது அதிகாரம்

பழுத்த காதலே செழித்த செல்வம்

காந்த விளக்கின் ஜோதியைக் கண்டு கதிகலங்கி நின்ற காதலரின் நிலைமையை என்னென்று விவரிப்பது! அந்தோ! இடிமுழக்கங் கேட்ட அரவம்போல் நடுங்கிப் பிடியிலிருந்த கரத்தைச் சடக்கென்று பிடுங்கிக்கொண்டு துள்ளித் துடித்து விலகி வலையிலகப்பட்ட மானைப்போல் இருவரும் நின்றுவிட்டார்கள். அந்தோ! ராஜத்தின் மனக் கலக்கத்தைவிடத் தாமோதரனின் மனத் துடிப்பு விவரித்தற்கியலாதது. தன் பொருட்டாகத் தனது உயிராகிய ராஜத்திற்கு என்ன விதமானகேடு சம்பவிக்குமோ என்ற யோசனையே அவனைக் கவர்ந்து கொண்டது. அவனை மீறிய மனக்கிளர்ச்சியினால் அவன் பெரு மூச்சு துரத்தி வருகிறது. அவனுடைய தேகமுற்றும் வியர்வை வெள்ளமாக மாறிப் பொங்கி வருகின்றது. ராஜத்திற்கோ அங்கு நிற்கும் மனிதரையும் விளக்கின் ஜோதியையும் கண்டதுதான் அவளுடைய சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன. கண்கள் இருண்டு பஞ்சடைந்து விட்டன. அவள் தன் தேகம் நிலத்தில் நிற்காமல் காம்பொடிந்த தாமரையைப்போல் ஆடித் துவண்டு சோர்ந்துபோக மூர்ச்சையாய்ச் சாய்ந்துவிட்டாள்.

அவள் மனோவேதனையினால் நிலை தடுமாறி சாய்ந்துவிட்டதை உணர்ந்த தாமோதரனுக்கு முன்னிலு மதிகமான மனக்கலக்கமும் சோகமும் சேர்ந்து வருத்தத் தொடங்கின. அவளை எடுத்து மூர்ச்சை தெளிவிக்க அவன் மனம் பதைக்கின்றது. எதிரில் காணும் எமதரிசனத்தை நோக்கின் ராஜத்தை எடுக்க அவன் அஞ்சுகிறான். எனினும் அவளுடைய பரிதாபகரமான நிலைமையைக் கண்ட அவன் மனம் சும்மாவிருக்கவும் இடந்தரவில்லை. அவளுடைய சிரம் பளிங்காசனத்தின் ஒரு சார்பிலும் தேகம் கீழ் பாகத்திலும் அலங்கோலமாகக் கிடப்பதைக் கண்டு மனந்தாங்கப்

பெருத தாமோதரன் எதிரிலிருந்த மனிதரையும் கவனிக்காது ஒரு விதமான ஆவேசத்தோடு முற்பட்டுத் தனக்கெதிரில் விழுந்து கிடக்கும் ராஜத்தை இருகரங்களாலும் தூக்கி எடுத்துப் பளிங்காசனத்தின்மேல் கிடத்தி அவளது முகத்தைத் தனது அங்கவஸ்திரத்தினுல் துடைத்துக்கொண்டிருக்கையில் அவனுடைய பின்புறம் மண்டையில் பளீரென்ற ஓரறையும் கன்னத்தில் சுளீரென்ற ஓர் அடியும் ஏககாலத்தில் விழுந்தன.

அந்தோ! தாமோதரன் தனக்கு இவ்விதம் நேருமென்று கனவிலும் எதிர்பார்க்கவில்லை யாதலாலும் விழுந்த அறை பலமாக இருந்தமையாலும் அவனுக்குப் பொறியே கலங்கிவிடும்படியாக ஆய்விட்டது. அவன் அந்த பாதையைச் சகிக்கமாட்டாமல், "ஆ! பார்த்தசாரதே! சம்போ! சங்கரா!!" என்று வாய்விட்டலறியபடியே தனதிரு கரங்களினுலும் தலையையும் கன்னத்தையும் இறுகப்பிடித்துக் கொண்டான். அவன் கண்களிலிருந்து நீர் மழைபோல் பெருகிய வண்ணமாக விருக்கிறது. அம்மழைக்கேற்ப மார்பில் பெருத்த இடிகளுமிடிக்கின்றன. அப்பொழுது கண்களிலிருந்து மின்னல்போல் பார்வையானது ராஜேஸ்வரியின் மீதே செல்கின்றது. தன்னை யடித்தது யார் என்பதைப் பற்றி அவன் எண்ணவில்லை. அகாரணமாகத் தன்னை யாரோ திடீரென்று அடித்துவிட்டார்களே என்ற ஆத்திரமாவது அவன் சிறிதும் கொண்டு திட்டவுமில்லை; ராஜேஸ்வரியின் தெளிவையே எதிர் நோக்கினுன்.

காலம் இரவாகையினல் சில் சில் என்ற குளிர்ந்த மந்தமாருதம் வீசுகின்றது. அந்தக் காற்று ராஜேஸ்வரியின் மீது வீசவீச அவள் சற்றுத் தெளிவுற்ருள். பின்பு அவள் சொற்ப நிமிடநேரத்தில் கண்ணைத்திறந்து விட்டாள். அவள் நினைவுமுற்றும் தனக்கெதிரில் தெரிந்த காந்த விளக்கு வெளிச்சம் காட்டிய மனிதர்களின் மேலே சென்றது. அவள் தெளிவுற்று எழுந்துவிட்டாள் எனினும் அவளது மனம் குழம்பித் தத்தளிக்கின்றது. தூரத்திலிருந்து விளக்கைக் காட்டிய உருவங்கள் தற்போது தனது அருகிலேயே ஒருவிதமான பார்வையினல் அக்கினியை அள்ளி வீசிக்கொண்டிருக்கக் கண்ட ராஜத்தின் மார்பில் இடி விழுந்து விட்டது. அங்கு

நிற்கும் உருவங்களை இன்னாரென்று தெட்டென அறிந்து கொண்ட ராஜேஸ்வரி தன்னையே மீறி "ஆ! ஐயோ!" என்று அலறியும் விட்டாள். ராஜம் தனக்கெதிரிலிருக்கும் தன் தந்தையை நோக்கிய வண்ணம் 'ஐயோ! இவர் நமது ஆருயிர்க்காதலனைத் தற்போதுள்ள ஆத்திரத்தில் என்ன செய்துவிடுவாரோ, இவர் கடுஞ்சினங் கொள்ளும் சுபாவ முடையவராயிற்றே! நம்மால் அத்தானுக்கு ஒன்றும் விபத்து நேராதிருக்க வேண்டுமே" என்று கருதித் துடித்தவண்ணம் "ஆ! என்னருமைத் தந்தாய்! பேதையின் பிழையை மன்னிக்க வேண்டுகிறேன்" என்று கதறியபடியே தாமோதரனுக்கும் தந்தைக்கும் மத்தியில் சென்று யுக்தியாக மறைத்தபடியே காலில் விழுந்துவிட்டாள்.

அதே தருணம் தாமோதரன் தனக்கெதிரிலிருப்பவர் தனது மாமா என்பதை யறிந்ததும் நெருப்பை மிதித்தவன் போலத் துள்ளினான். "ஐயோ! ராஜத்திற்கு என்னால் என்ன நேருமோ! அவளுடைய காலில் ஒட்டிய தூசிக்கு ஏதேனும் ஆபத்து சம்பவித்தாலும் என் கண்ணில் முள் தைத்ததுபோலத் தோன்றுமே; அங்ஙனமிருக்க தற்போது மாமா கொண்டிருக்கும் ஆக்ரோஷத்தில் ராஜத்தை அவர் என்ன செய்வாரோ தெரியவில்லையே! அவளை அபவாதத்திற்குள்ளாக்கிப் பேசுவாரோ! அபாண்ட மொழிகளால் திட்டுவாரோ! அல்லது கை நீண்டி அடித்துவிடுவாரோ! ஐயோ! என்ன செய்வேன்! தற்போது அவளுக்கு நேர்ந்திருக்கும் ஆபத்து என்னாலல்லவா! அதற்கு யானே பரிகாரந்தேடி என் கண்மணியைக் காக்க முயலவேண்டும்" என்று எண்ணியவனாய் "மாமா! என்னருமை மாமா! என்மீது சித்தமிரங்கி எளியேன் செய்த பிழை யாதாயினும் மன்னித்தருளவேண்டும்" என்று கூறியபடியே அவனும் அவரது காலில் விழுந்தான்.

ஒரே காலத்தில் இருவரும் சொல்லிக் கொண்டவர்கள்போல் காலில் விழுந்து புலம்புவதைக்கண்ட கண்ணபிரானுக்கு ஆத்திரமும் மனக்கொதிப்பும் இன்னும் பன்மடங்கதிகரித்தன. பின் அடங்காத ஆக்ரோஷம் உண்டாய்விட்டது. இருவரும் தாங்கள் செய்த காரியத்தைச் சாதிக்க, இவ்விதம் செய்வதென முன்னுடியே தீர்மானம்

செய்துகொண்டு நாடகம் நடிக்கின்றார்கள் என்று கருதிச் சற்றும் தாக்ஷண்ணிய மின்றி இருகாலினாலேயும் இருவரையும் உதைத்துத் தள்ளிவிட்டுத் தன் கையிலிருந்த பிரம்பினால்(walking stick) தாமோதரனின் முதுகில் சுளீர் சுளீர் என்று நான்கடி கொடுத்து, "அடே குலத்துரோகி! என் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பே! உன்னுடைய கொழுப்புப்பிடித்த செய்கையினால் இவ்வளவு தூரத் திற்கு வந்துவிட்டது! உம்!" என்று உரப்பினான்.

அந்தோ! தாமோதரனின்மீது விழுந்த அடிகள் ராஜத்தின் உயிரையே வெளிக் கிளப்புகின்றன. அந்த அடி தன்மேலேயே பட்டதுபோல் அவள் துடிக்கின்றாள். "ஐயோ! ஒருவழிக் கும் வராமல் தனித்து உட்கார்ந்திருந்தவரைப் பாவி யானன்றோ வலுவிலழைத்து உயிரை வாங்கும்படி செய்ததாயிற்று. ஐயோ! கடவுளே! ஒன்று நினைக்க மற்றொன்றுண்டாகிறதே!" என்று கண்ணீர் வடித்தவண்ணம் தன் தந்தையின் அருகேயோடி அவர் கையைத் தடுத்து "அப்பா! வேண்டாம்; வேண்டாம். வீணாக அத்தானை அடிக்காதீர்கள். இம்சிக்க வேண்டாம். அப்பா! அவர்மீது யாதுகுற்றமென்று இவ்விதம் செய்கின்றீர்கள்?" என்று தடுத்துப் பேச்சை முடிப்பதற்குள் கண்ணபிரானுக்குக் கோபம் உச்சநிலையையடைந்துவிட்டது. அவன் ஆத்திரத்தினால் மகளென்பதையும் பாராமல் "ஆகாகா! அடி துஷ்டப்பதரே! தனது பிறப்பும் பெற்றோரும் ஜாதிகுலம் முதலியவற்றையும் அறியாத அற்ப அநாதையும் அநாமதேயனுமாகிய இவன் செய்தது தவறு என்பதை மறைத்து "என்ன தப்பிதம் செய்தார்?" என்று பரிந்து பேச வரும்படியான துணிபு உனக்கு வந்துவிட்டதா! ஊர் பெயரறியாத ப்ரஷ்டனிவன். மகா கண்ணியம் வாய்ந்த என் குடும்பத்திற்கு இழுக்குத் தேடவந்த பரமத்துரோகி. இவன் எந்த ஈனஜாதியிலுதித்தவனோ! எந்த விபசாரி பெற்றவனோ! எந்தக் கைம்பெண்ணுக்குப் பிறந்த கம்மனாட்டியோ! இவன் கலியாணச் சோற்றைத்தின்று போகாமல் இவ்விதமான தீய செய்கைகளை யெல்லாம் செய்வது தகுமா? அடி! பாதகி! உன்னாலேயே இந்த அனர்த்தங்களெல்லாம் விளைகின்றன. சிச்சி விலகு நாயே!" என்று அவளையும் இரண்டறை அறைந்து தள்ளினான்.

மிக நுட்பமானதும் புஷ்பம் போன்றதுமான தேகத்தையுடைய ராஜத்தின் மீது விழுந்த முரட்டு அடிகள், அவள் தன் அத்தானின்மேல் கொண்டிருந்த காதலின் வன்மையினால் அவளை அதிகமாகப் பாதிக்கவில்லை என்றே கூறலாம். அவள் அந்த அடியையும் அத்தானின் காதல் சன்மானமென எண்ணியவளாய் மீண்டும் தந்தையருகில்சென்று மன்றாடிய குரலினால், "அப்பா! தாங்கள் கூறுகின்ற வார்த்தை வியப்பாக விருக்கின்றதே! தாங்கள் கூறியபடி அத்தானுடைய ஜாதி குலம் தெரியாமற்போயினும் தமது சகோதரியாரால் வளர்க்கப்பட்ட குணவானல்லவா அவர்? அவருக்குள்ள குணவிசேஷத்தினாலும் அவருடைய படிப்பின் முதிர்ச்சியினாலும் அவருடைய குலமும் உயர்வானதென்பது தெளிவாய் விளங்கவில்லையா? அவர் ஈன குலத்தினராக விருப்பின் நடையுடைகளிலும் மற்றைய பாவனைகளிலும் தம்மைப்போன்ற பெரியாருக்கு அது விளங்காமலிருக்குமா? அவரைத் தாங்கள் ஆதியில் மிக்க பிரீதியுடன் நடத்தியபோது இவைகளைக்கவனியாமல் தற்போது பழிப்பது பொருந்துமா! அப்பா! ஜாதி, குலம் முதலியவற்றை விட குணமே சிறந்ததென ஆன்றோர் கூறுவதைத் தாம் கேட்டதில்லையா? அக்காள் மரகத வல்லியின் விவாக காலத்தில் தாம் மாப்பிள்ளை பார்த்தபோது இப்பாடலைத் தாமே எத்தனைமுறை அம்மாளிடம் பாடியிருக்கிறீர்கள். அப்பாடலைத் தற்போது மறந்துவிடமுடியுமா?

தடவரையதன் மீது விளையினுஞ் சோளமது
சன்ன சம்பாவாகுமோ!
சந்ததமும் வாடாதிருந்தாலு மெட்டிமலர்
சாதி மல்லிகை யாகுமோ!
கடலலைா நிறைவெள்ள மாயினுஞ் சுவை பெற்ற
காவிரியி னூற்றாகுமோ!
காகங்கள் கோடிதோனி செய்தாலு மொருசிறு
கருங்குயிற் றேனியாகுமோ!
படர்கின்ற பேய்ச்சுரை சொரிந்த பழமுந்திரிப்
பழமதற் கிணையாகுமோ!

பகர்கின்ற சாதியுங் கனவயது மேன்மையும்
பலகூட்டமுந் தேகமார்
வடிவதிகமன்று குணமேயதிக மேன்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர் மேலு மங்கைமணவாளனே !
வரதவேங்கட ராயனே !

—திருவேங்கட சதகம்.

இப்பாடல் எனக்கு நன்றாக நினைவுக்கு வருகின்றதே ! அப்பா! அத்தானின் குணவிசேஷத்தை நன்கறிந்த தாமே அவரைப் புறக்கணித்துக் கூறலாமா! தாம் கொடுத்த மதிப்பாலன்றோ எனக்கு அத்தானிடம் பிரியம் வளர்ந்து செடியாய், சிறிய மரமுமாய்விட்டது. அதை வெட்ட நினைப்பது தகுமோ? அப்பா ! தாம் அடித்த அடியால் அவர் மூர்ச்சையாய் விழுந்துவிட்டாரே ! இது தம்போன்ற பெரிய மனிதருக்கு அழகாகுமோ? அப்பா ! காதலை ஊட்டிவளர்த்துப் பின் காதலைச் சேதிப்பதானது உயிரையே வாள்கொண்டு வெட்டுவதுபோலன்றோ ஆகின்றது. ஐயோ ! அவர் தேகத்தில் ரத்தம் வழிகின்றதே !" என்று கூறி முடிப்பதற்குள் கண்ணபிரான் நறநற வென்று பல்லைக் கடித்துக் கொண்டபடியே, "ஆஹா, ஆஹா! என்ன துணிபு ! என்ன தைரியம் ! அடீ ! ராஜம் ! நீயோ எனக்கு பிரசங்கம் செய்வது? சீச்சீ ! துஷ்டையே ! காதலாம், கருணையாம், காமமாம், நேசமாம். எத்தனை பெரிய வார்த்தைகளை நீ கூற முற்பட்டாய்? ஆகா! இத்தனை கொழுப்பும் இந்த இறுமாப்புக்கொண்ட தடியனாலேயே உனக்கு வந்துவிட்டதென்பதை நான் அறிந்தேன். சோற்றுக்கு வழியற்ற சோதாப்பயல் இவனைப் பற்றி நீ சற்றும் கூச்சமின்றிப் புகழும் புகழ்ச்சியைக் கேட்டுச் சந்தோஷமுறும் பேர்வழியானன்று. இத்தனை பெரிய குடும்பத்தில் அதிலும் பலஜனங்கள் கூடியுள்ள தருணத்தில் சற்றும் அச்சமின்றித் துணிந்து நீங்கள் சந்தித்த செய்கையானது என் குலத்தையே வேரோடு குலைக்கும் இழிவான செய்கை என்பதைக் கவனித்தாயா! அற்பப் புழுவுக்குச் சமானமான இவனை இச்சிப்பது வெகு அழகு. மாப்பிள்ளை எந்த ஊர், யார் பிள்ளை என்றால் எனக்கு நல்ல கௌரவத்துடன் சொல்

வதற்குத் தகுதியான சம்மந்தத்தைத்தான் நீ நிச்சயித்திருக்கிறாய்! நாதியற்றநாய். பணமற்ற பஞ்சை! குலமற்ற குப்பை! இத்தகைய அநாதையைச் சோறிட்டு வளர்த்தேனே, அதற்கு இவன் இந்தச் சன்மானம் செய்கிறான் போலும்! சீச்சி! குலத்ரோகி! என்முன் நில்லாதே! அற்பப் புழுவுக்கு வெட்கங்கெட்டுப் பரிந்து வருகிறாயா! உள்ளே சென்றுவிடு" என்று ராஜத்தின் கையைப் பிடித்துத் தரத் தரவென்று இழுத்துத் தள்ளினான்.

தாமோதரனுக்குச் சற்றுத் தெளிவு ஏற்பட்டபோதே ராஜத்தை அவள் தந்தை தள்ளினான். அதைக்கண்ட அவன் "ஐயோ! என்னை எப்படி வதைத்தாலும் பொறுப்பேனே! இவளையேன் இப்படி இம்சிக்கிறார்?" என்று கருதிக் கலங்கினான். தன் காதலியின் மேல் ஒரு சிறிய காற்றுத் தாக்கி அதனால் அவள் தேகம் அசைவுற்றாலும் அதைக் கண்டு சகிக்க இயலாத இளகிய மனமுடைய தாமோதரன் கண்ணீரைப் பெருக்கினான் "அந்தோ! ஒரு பெண் மணியோ ஆண்பாலோ ஒருவரிடத்தில் ஒருவர் உண்மையான ஆழ்ந்த காதல் கொண்டுவிட்டால் அவர்களில் யாருக்கேனும் ஒருவருக்கு ஒருவிதக் கெடுதி நேரிடின் இன்னொருவர் பார்த்துச் சகிப்பார்களா? சகியார். உண்மைக் காதலின் உயரிய விசேஷமிது! தன்னுயிரையேனும் கொடுத்துத் தடுக்க முயலும்படி காதலென்னும் காந்தம் அவர்களைத் தூண்டும். தாம் காதலித்த மனிதரின்மீது காற்றடிக்கவும் பொறாத மனிதர் தாமே அவர்களுக்குத் தீங்கு செய்ய முற்படுவரோ! ஒருவரைக் காதலித்ததாகப் பாவனை காட்டிப் பின் அவர்க்குத் தாமே தீங்கு செய்ய முற்படுவோர் உண்மையாகக் காதல் கொண்டதாகக் கருதப்படமாட்டார்கள். அதைக் காமமென்றே சொல்லலாம். காமப்போக்காக இச்சித்த மனிதர்தான் தனக்கு அப்பொருள் கிட்டாதென்பதை யறிந்து அதை மனந்துணிந்து இம்சிக்கவும் வருத்தவும் முற்படுவோர். உண்மையாகக் காதலித்தவர்களோ தன்னுயுள் பரியந்தம் தனக்குப் பொருள் கிட்டாவிடினும் தன் மனத்தினாலும் அப்பொருளுக்குச் சிறிய தீங்கையும் கனவிலும் எண்ணமாட்டார்கள். அந்தக் காதல் அப்படி எண்ண இடந்தராது. காதலித்த உயிரும் காதலிக்கப்

பட்ட உயிரும் இரண்டாக விருப்பினும் ஒன்றேயாம். காமத்திற்கோ அது நேர் விரோதம். உயிரையே வைத்திருப்பதாகக் கூறுவார்கள். இச்சை பூர்த்தியில்லை என்பது தெரிந்துவிடுமாயின் அந்த உயிருக்கே ஆணியைத் தேடத் துணிந்துவிடுவார்கள். காதலையடைந்த மனிதர்கட்கு கடவுளின் கிருபை மறைந்து ப்ரகாசித்துக் கொண்டே இருந்து சாந்த மென்னும் சக்தியைக்கொடுத்து ரக்ஷிக்கும். உண்மையாகக் காதலித்த பெண்ணை வேறொருவன் மணந்து சென்றுவிடினும் அதனல் முதலில் காதலித்தவன் அவளுக்கு ஒரு தீங்கும் எண்ணுமல் தன் காதலியை அவள் வீட்டு வாயிலிலேனும் கண்குளிரக்கண்டு களிப்பான். இந்த பாக்யமேனும் நமக்குக் கிடைத்ததே என்று மனப்பூர்வமாக எண்ணுவான். அத்தகைய காதலை நாம் ராஜத்தினிடத்தில் பூர்ணமாகக் கொண்டிருப்பதின் பயனுக என் காதல் கண்மணியை ஈன்ற மகானுபாவனின் கையால் நாம் அடிபடுவது தகாததன்று. அவரை நாம் கோபிப்பதே அழகாகாது. நாம் ஆத்திரப்பட்டுக் கோபிப்போமானல் என் கண்மணியின் மனத்திற்கு வருத்த முண்டாகும். அதை நாம் அவளுக்கு உண்டாக்கக் கூடாது. ராஜத்தின் நல் வாழ்க்கையொன்றே என் இன்ப நிலையமாகும். நாம் யோசித்தே செய்யவேண்டும்'' என்று பலவாருகச் சில நிமிஷ நேரங்கள் வரையில் யோசனை செய்து, பின் எழுந்து தன் மாமனின் காலருகில் சென்று, கோவெனக்கதறியபடியே தாழ்மையான, தழதழத்த குரலால் பேசத்தொடங்கி ''என்னருமை மாமா!

மேலான ஜாதியி லுதித்தாலு மதிலென்ன
வேதவித்தைகள் கற்றுமென்ன
மிக்கவதி ரூபமோடு சற்குண மிருந்தென்ன
மிதுமானி யாகிலென்ன
பாலான மொழியுடையனுயென்ன ஆசார
பரனுயிருந்து மென்ன
பார்மீது வீரமோடு ஞானவானுயென்ன
பாக்கியமிலாத போது

வாலாயமாய்ப் பெற்றதாயுஞ் சலித்திடுவள்
வந்தசுற்றமு மிகழுமே
மரியாதையில்லாம லனைவரும் பேசுவார்
மனைவியுந் தூறு சொல்வாள்
ஆலாலமுண்ட கனிவாயனே நேயனே
அனகனே அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுரகிரிவளர்
அறப்பளீசுர தேவனே.

—அறப்பளீசுர சதகம்.

கோதறு கல்வி சாலூர்க் குடியிருந்தறியானேனும்
ஓதருஞ் செல்வ மிக்கோ னொருவனே சிறந்தோ னுவன்
காதலின் வேத முன்னுங் கலைகள்கற் றுணர்ந்தோ னேனுந்
தீதமை மிடிய னுயிற் சிறந்திடான் வேத்த வைக்கே.

—குசேலோபாக்கியானம்.

இவ்விதமெலாம் வறுமையின் வைபவத்தை ஆன்றோர் கூறியுள்ளார்கள். உண்மையில் அநாதையாகித் தாய் தந்தையரும் சுற்றமும் அற்ற என்னைத் தாங்கள் கூறுவதுபற்றிச் சற்றும் சிந்திக்கிலேன். மாமா! எனதன்புள்ள மாமா! எனக்கு இப்புவியில் என் உயிரைவிட மேலான பொருள் ஒன்றுளது. அப்பொருளே தமது அருமந்தமகள் ராஜேஸ்வரியாவள். என்னைத் தாங்கள் சித்திரவதை செய்யினும் சர்வசம்மதம். தம்மை யொருவரம் கேட்கிறேன்; தந்தருளவேண்டும். நான் பரதேசியிலும் பரதேசி; உலகத்தில் உற்றூர், பெற்றூர், செல்வம், சினேகிதர் முதலிய ஒரு திக்குமற்ற அநாதை! தங்களுடைய தமக்கையின் தயவால் செடியாகி, மரமானேன். இனி இம்மரம் பட்டு உலர்ந்து காய்ந்து எரிந்து விடும் நாளும் சமீபித்து விட்டது. என் மேலுள்ள கோபத்தினுல்-என்-ராஜத்தைத் தாம் எதுவும் சொல்லவோ, செய்யவோ வேண்டாம். இது ஒன்றே தம்மை நான் வேண்டிக்கொள்கிறேன். தங்கள் குடும்பத்தாரால் வளர்க்கப்பட்ட அடியேனுடன் அவள் பேசியது தமக்குத்தப்பிதமாகத் தோன்றினும் அதனைப் பகிரங்கப் படுத்தாது அத

ஞலவளுக்கொரு இழுக்கும் நேரா வண்ணம் காக்கவேண்டும். மாமா! ராஜம் ஒரு பாபமுமறியாள். நான் ராஜம் இங்கிருப்பதை யறியாது திடீரென்று வந்தது என்மீது பிசகு. அதை க்ஷமித்தருளவேண்டும். நான் வருவதை அவள் சற்றுமறியமாட்டாள். அவள் பளிங்காசனத்தில் வீற்றிருந்தாள். நான் கால்சுத்தி செய்துகொள்ள வந்தேன். வந்தவிடத்தில் என்...........கண்டதனல் பழைய நினைவு மூண்டு விட்டதால் நானே வலியச்சென்று "ராஜம்! க்ஷேமமா?" என்று விசாரித்துவிட்டேன். இது என்மீது குற்றமே! அவள் என்னைக்கண்டு வெறுப்பே கொண்டு 'என் வந்தாய்?' எனச் சீற்றமுங்கொண்டாள். மாமா! தாங்கள் காட்டிய பழைய ப்ரீதியே என்னை யவ்வாறு செய்யும்படியாகத் தூண்டிவிட்டது. நான் கெட்ட எண்ணத்துடன் அவளைச் சந்திக்க வேண்டுமென்று வரவில்லை. இதை உறுதியாகவும் திட்டமாகவும் கூறி ராஜத்தின் கையில் சத்தியம் செய்தேன்; அப்போதே நீங்கள் காட்டியவிளக்கைக் கண்டேன். தப்பிதமுற்றும் என்மீதுதான். மாமா! ராஜத்தைக் கடிந்துகொள்ளாதீர்கள். நான் செய்த குற்றத்தை யொப்புக்கொண்டேன். மன்னித்தருள்க மாமா! தாங்கள் கூறியதுபோல் அநாதையும் ஏழையுமான அடியேன் இன்றோடு இவ்விடத்தை விட்டுச்சென்று விடுகிறேன். என்னைப்படைத்த ஈசனும் என்னைக் கைவிட்டு விடுவான் என்று எண்ணவில்லை; அவனை நம்பி இவ்வூரையும் (என்னுருயிர்க் காதற் கண்மணி ராஜத்தையும்) ஆ! மாமா! தங்களையும் என்னை இதுகாறும் வளர்த்த மாதாபிதாக்களையும் விட்டுச் செல்கிறேன். ராஜத்தை நிந்தையினின்று காப்பாற்றுங்கள். மாமா! ராஜத்தை யடையப் பாக்கியமுள்ளவன் யானன்று என்பதைத் தெரிந்துகொண்டேன். கிட்டாப்பொருளை அடைய யான் ஆவல் கொள்ளவில்லை. என்னை அத்தகைய தூர்த்தனுக எண்ணவேண்டாம். மாமா! ஈசன் என்னை அநாதையாகப் பிறப்பித்தாலும், தங்கள் குடும்பத்தாரும் (என் காதல் ரத்தினமாகிய ராஜமும்) உள்ளவரையில் நான் அநாதையல்ல என்று எண்ணியிருந்தேன். மாமா! இன்றே என்னுடைய திக்கற்றபிழைப்பின் நிலைமையை நான் அறிந்தேன். கேவலமான பரதேசி யான் என்பதை உணர்ந்தேன். என்னைப் படைத்த கடவுள் என்னைக் காப்பாற்றுவார் என்கிற திடமுண்டு.

ஆனால் அவர் என் கண்காணுமலிருப்பார். கண்ணெதிர்ப்பட்ட மனி தப்பூண்டில் ஒருவரும் அற்ற அநாதைப் பரதேசியாகும் நான். சந்தேகமில்லை. மாமா! என்னால் ராஜத்திற்கு ஒருவித இழிவும் ஏற்படக்கூடாது. அதையே நான் வேண்டுகிறேன். அவ்விதமிருப் பதாகக் காதினில் கேட்டமாத்திரத்தில் என்னுயிர் தரியாது. மாமா! நான் ராஜத்தை மணந்து கொள்ளும்பொருட்டு இவ்விதம் மாயஜால வார்த்தையாடுவதாய் நினைப்பதாகத் தங்கள் முகக்குறி காட்டுகின் றது. அடியேனிடத்தில் அத்தகைய எண்ணம் சிறிதும் வேண்டாம். மகா உன்னதபதவியிலும் உயரிய குலத்திலும் பிறந்துள்ள ராஜத் திற்கு அடியேன் அருகனன்று என்பதை நான் முன்னரே உணர்ந்து விட்டேன். உண்மையாகவும் கடவுள் மீது ஆணையாகவும் சொல்லும் என் வார்த்தையைத் தாங்கள் ஏற்றருளவேண்டும். ராஜத்தை ஒரு போதும் நிந்திக்கவேண்டாம். வசை கூற வேண்டாம்; என் விதி யுடன் நான் செல்கிறேன். என் மாமா! நான் சென்றுவருகிறேன். என்னால் பேசக்கூடாதபடி எனக்கு ஏதோ வேதனை உண்டாகின்றது. என் தலையின் நோயும் மனநோயும் ஒன்றுகூடி விளையாட ஆரம்பிக் கின்றன. நான் சென்றுவருகிறேன். என்னைப்பற்றி எண்ண வேண் டாம். ஒண்டியானேன்; தனித்து ஏகுகிறேன். மாமா! நமஸ்காரம். தங்கள் குடும்பச்சோற்றைத் தின்று வளர்ந்ததை ஒருபோதும் மற வேன். தாங்களும் தங்கள் சகோதரியாரும் ஊட்டி வளர்த்ததை நான் என் தேகம் சாம்பலானாலும் மறக்க முடியாது. மாமா! என் வந்தனத்தை அம்மாமிக்குத் தெரிவிக்கவும்" என்று கூறிக்கொண்டே ராஜமிருந்த திக்கை நோக்கினான். "ஆ! இன்றே என் கண்களுக்கு என் கண்மணியின் எழில் விருந்தின் கடைசி தின மாயிற்றே! ஐயோ! இனிமேல்;உன் முகத்தையும் காணப்பாக்கிய மற்ற பாவியாய் விட்டேன்" என்று எண்ணினான். அவனை யறி யாதபடி துயரம் மேலிட்டுக் கண்களில் நீர் தாரை தாரையாக வழி ந்து கண்ணை மறைக்கின்றது. "ஐயோ! கண்ணீரே! இன்னும் அற்பநேரக் காட்சியைக் காணமுடியாது ஏன் தடுக்கின்றாய்? நீ கூட என்னைச் சோதிக்கின்றாயா!" என்று எண்ணியவாறு கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மிகவும் பரிதாபகரமாகவும் கண்டோர் மன முருகும் வண்ணமும் ராஜத்தை நோக்கினான்.

ராஜேஸ்வரி தன் தந்தையின் தற்போதைய நிலைமையைக்கண்டு நடுங்கிவிட்டாள். எனினும் தாமோதரன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அவள் மனத்தைக் கரைத்து உருக்கிக் கண்ணீராய்க்கொட்டுகின்றது. அவள் வாய்விட்டுச்சொல்லவும் தோன்றாது ப்ரமித்துத் தம்பித்துவிட்டாள். அப்போது தாமோதரன் அவளைப் பார்த்த பார்வையானது "ஐயோ! ஐயோ ராஜரத்தினமே! நீயும் என்னைக் கைவிட்டு விட்டாயா?" என்று அவன் கேட்பதுபோல் இருக்கின்றது. அப்போது அவள் சர்வாங்கங்களும் துடித்தன. கண்ணீர்பெருகி மேல் முந்தானை முற்றும் நனைந்துவிட்டது. தன் காதலன் இவ்வளவு பேச்சுகளைப் பேசியும் தன் பிதா வாய்திறவாமல் மௌனம் சாதிப்பதைக் கண்டு ராஜம் பயமும் திகைப்பும் கொண்டாள். தாமோதரனுடைய பரிதாபகரமான பார்வையைக் கண்ட ராஜம் "ஆ! அத்தான்! பயப்படாதீர்கள். நான் தங்களைக் கைவிடவில்லை" என்று எண்ணுகிறாள். உடனே அவளுக்குச் சற்று முன் தாமோதரன் கூறிய புத்திமதிகளனைத்தும் நினைவிற்கு வந்து, குறுக்கிடுவதுடன் தந்தையின் கோபமும் சேர்ந்து அவளைநடுக்கமுறச்செய்கிறது. இந்த நிலையில் தாமோதரன் ராஜத்தை வெகுபரிதாபகரமாகப் பார்த்தபடியே! "மாமனின் அருமை மகளே! என் ரா.......ஜே.......ச்.......வ.......ரீ ....எ.......ன்.......கா.......த.......ல்.......கி.......ளி.......யே....... ரா.......ஜ.......ம்.......பா.......வி யான் சென்று வருகின்றேன்....... இனி என்னை ஒரு விநாடியும் எண்ணாதே! நான் இறந்துவிட்டதாகத் தீர்மானித்து உன் பெற்றோரின் பிரியப்படி உன் வாழ்நாளை நடத்து என் இன்ப வடிவமே! ஆநந்தத்தோற்றமே! இணையிலா அமுதச்சுடரே! பரதேசியானேன். என் கண்ணே! என் உயிரினுமினிய பொருளாகிய என் காதற்கிளியே! உன்னையும் பிரிந்தேன். இதுகாறும் வளர்த்த வனையோரையும் கைவிட்டேன். என்னைச் சுமந்த இவ்வூரையும் மறந்தேன். என் வாழ்நாளின் இன்பம் யாவும் துறந்தேன். என் இன்ப வடிவத்தை இழந்தேன். அநாதையானேன். பரதேசிபோல் கிளம்பிவிட்டேன். என் ராஜேச்வரி! என் காதல் கனியே! நான் சென்று வரட்டுமா! அந்தோ! வருவதெங்ஙனம்? செல்கிறேன். உன் முத்தான வாயின் அமுதமொழியொன்றே வேண்டினேன். வேண்டுகிறேன். எனக்குத்தரமளிப்பாய் கண்ணே

ராஜம்!'' என்று தன்னைமீறியும் அருகில் தன் மாமனிருப்பதையும் சோகத்தில் மறந்து வெகு பரிதாபகரமாயும் கண்டோர் மனமுருகும்படியாயும் கூறினன்.

இதைக்கேட்ட ராஜத்திற்கு இன்னுமதிக துக்கம் வந்துவிட்டது. அவளால் வாய்திறந்து பேசமுடியவில்லை. சிறுகுழந்தையைப் போல் தேம்பித்தேம்பி அழுது துடிக்கின்ருள். இந்தக் கோரமான காட்சியைக் கண்ட கண்ணபிரானுக்கு இன்னும் அதிக ஆக்ரோஷம் உண்டாய் "ஆகாகா! அடே சண்டாளா! 'அவன் கெட்டான்குடியன் எனக்கு இன்னும் ஒரு மொந்தை கள்ளூவாருங்கள்' என்று கேட்பது போல் 'என்னை தூர்த்தனுக எண்ணுதே' என்று கூறி விட்டு உடனே உன் தூர்த்தத்தனத்தைக் காட்டுகின்ருயா? உன் வாயில்வந்தபடி யெல்லாம் கூறுவதென்று எண்ணிப் பிதற்றுகின்ருயா! உன் தலை திமிர் எந்தமட்டும் செல்கின்றது பார்ப்போம் என்று நானும் இந்த நாடகங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டே சும்மாவிருந்தேன். ஏதேது தலைமேலேறிவிட்டதுபோல இருக்கின்றது'' என்று கூறிக்கொண்டே ராஜத்தைப் பார்த்து "ஏ! அதிகப் பிரசங்கி, சீச்சீ! உள்ளே செல். இன்னுமிங்கு நிற்கின்ருயா! அவன் தாறுமாருகப் பிதற்றுவதைக் கேட்பதும் நிற்பதும் வெகு அழகு. நீ புத்தியறிந்த பாவை என்பதையும் மறந்தாயோ!'' என்று ராஜத்தை உரத்துக்கூறிக் கையைப் பற்றி மீண்டும் இழுத்துத் தள்ளினர். பஞ்சுபோன்ற அவளது கையைப் பற்றி முரட்டுத்தனமாகத் தள்ளியதைக் கண்டு சகியாத தாமோதரன், மெல்ல "மாமா! என்மீது கொண்ட கோபத்தை அவள்மீது காட்டாதீர்கள். நான் இனி இவ்விடம் அரை நிமிஷமும் தங்குவதும் ராஜத்திற்குத் தொல்லையேயாம். மாமா! நான் செல்கிறேன்'' என்று வணங்கி எழுந்து தன் மாமனிருந்த இடத்திற்கு நான்கு கஜதூரத்திற் கப்பாலிருக்கும் ராஜத்தினருகில் துணிகரமாகச் சென்று அவ்விடத்தையும் அவள் சம்மதத்தையும் எதிர் நோக்காமல் அவளிரு கரங்களையும் எடுத்து ஆநந்தமயமான இன்ப வெள்ளத்தில் கிஞ்சித்து மிதப்பவன் போலக் கண்களில் ஒத்திக்கொண்டு "என் கண்ணே! தீர்ந்தது எனதின்பம். இன்றோடு முடிந்தது என் மகிழ்ச்சி. ராஜம்!

உனதடையாளமாக எனக்கு ஏதேனும் கொடுக்க முடியுமா !'' என்று மெல்லத் தணிந்த குரலில் கேட்டான். நுண்ணறிவுடைய ராஜம் உடனே தாமதமின்றித் தன் கழுத்தில் அலங்கிருதமாயிருந்த டாலர்கள் கோத்த சங்கிலியை எடுத்துத் தாமோதரன் கையில் கொடுத்தாள். கண்ணீர் உதிர்த்தவண்ணம் "அத்தான்!'' என்றாள். மேலே சொல்வதற்குள் தொண்டையை யடைத்தது துக்கம். இதற்குள் தாமோதரன் மாமா எங்கே வந்துவிடுவாரோ என்ற பயத்தினால் "ராஜரத்தினமே! என் நேசசித்திரமே! உன் அமுதவாயினால் எனக்குத்தரமளிப்பாய் கண்ணே! அதொன்றே யான் எதிர்பார்க்கிறேன்'' என்றான். இதற்குள் ராஜம் தன் தந்தை இவ்விடம் நோக்கி வருவதை யறிந்து புலம்பியபடியே "என் ஆருயிர்க் காதற் களஞ்சியம் போன்ற அத்தான்! சென்றுவருக. கடவுள் உமக்குத் துணைபுரிக. ஆ! அத்தான்! அத்தான்! கைவிட்டீரோ! கைவிட்டேனு!'' என்று இரண்டையும் கூறி நிலத்தில் சாய்ந்தாள். தாமோதரனும் "தலைவிதியே! ஈசா! உன் திருவிளையாடல் இதுவோ?'' என்று அலறியபடியே அவ்விடத்தை விட்டுத் திரும்பினான். திரும்பி இரண்டடி வைப்பதற்குள் முன்போல் மண்டையில் பலத்த அடி விழுந்தது. திடீரென்று அவனும் "ஆ! ராஜேச்வரி!'' என்று கூறி விழுந்துவிட்டான்.

தாமோதரன் ராஜத்தினிடம் செல்வதை யறிந்த கண்ணபிரான் தானும் அங்குச் சென்று தடுக்க முயல்கையில் தனது வேஷ்டி காலில் தடுக்கி விழுந்துவிட்டான். அவ்வேகத்தில் காலில் விரல் நன்றாய் மடங்கி விட்டதனால் வலிபாதையில் சீக்கிரம் இங்கு வருவதற்கியலாமல் போய்விட்டது. உடனே அவன் சற்றுச்சமாளித்துக் கொண்டு வருவதற்குள் தாமோதரன் திரும்பி விட்டான். தன் காலில் காயம் பட்டதனால் மூண்ட ஆத்திரம், இவன் துணிந்து ராஜத்தருகில் சென்றது முதலிய எல்லாம் சேர்ந்தபடியால், அவன் தாமோதரனின் தலையில் ஓங்கி ஓர் அறை அறைந்தான். தாமோதரன் விழுந்ததும் அவன் ராஜத்தருகே சென்றான். அவளும் மூர்ச்சித்திருந்தாள்.

இதற்குள் தாமோதரன் சற்றுத் தெளிந்து எழுந்து ராஜமிருந்த திக்கை நோக்கியபடியே "ஆ! என் ஆசைக் கண்ணே! மோசம் போனேன். என் இன்பவடிவமே! துன்பத்துடன் செல்கிறேன். நீ இனிது வாழ்க! உன் பெற்றோர் சுகமாக வாழ்க!" என்று எண்ணியவனாய்த் தோட்டத்தின் பின்பக்க வழியாய்ப் புலம்பியபடி சென்றுவிட்டான்.

ராஜத்தின் தந்தை அங்கருகிலிருந்த ஜலத்தை முகத்தில் தெளித்தும் அவள் கண் திறக்கவில்லை. உயிர் போய் விட்டதோ என்று ஐயமுறும்படியாக விழுந்துகிடக்கிறாள். தாமோதரன் சென்று விட்டதை யறிந்த கண்ணபிரான் உள்ளே ஓடி ராஜம் தோட்டத்திற்குச்சென்றதாயும் தடுக்கிவிழுந்து மூர்ச்சித்து விட்டதாயும் கூறி ருக்மிணியை அழைத்து வந்தான். இது கேட்ட ருக்மிணி பதறிப்போய் "ஆ! சற்றுமுன் தான் தோட்டத்திற்குச் செல்வதாகத் தெரிவித்துச் சென்றாளே! அங்கு விழுந்துவிட்டதனால்தான் இந்நேரமாயதோ!" என்று கலங்கிக் கொண்டே ஓடிவந்தாள். கண்ணபிரான் தன்னுடன் கூட விருந்து விளக்குக் காட்டிய நண்பனிடம் இங்கு நடந்த சகல விஷயங்களையும் வெளியிடா திருக்கும்படி வேண்டிக்கொண்டான். ருக்மிணி ராஜத்தை ஒரு குழந்தையைப்போல் எடுத்துக் கொண்டு உள்ளே சென்று அவளறையில் சயனிக்கச் செய்தாள். "இவள் திடீரென்று மூர்ச்சையாக வேண்டிய காரணம் யாதோ தெரியவில்லையே! ஒருகால் விஷப்பூச்சி ஏதேனும் தீண்டியிருக்குமோ ஒன்றும் தெரியவில்லையே!" என்று கலங்கிப்போய் அவளது முகத்தில் பன்னீர் தெளித்து விசிறிகொண்டு வீசிப் பார்க்கிறார்கள். தெளிவுண்டாகவில்லை. இந்தச் செய்தி அங்குள்ள ஆண் பெண் இருபாலருக்கும் தெரிந்துவிட்டது. ஒரே கும்பலாக எல்லோரும் கூடித் தவிக்கின்றார்கள். சிலர் சென்று வைத்தியரை அழைத்து வந்தார்கள். வைத்தியனும் தன்னாலான சிகிச்சை செய்துபார்த்து மருந்துகளைச் செலுத்துகிறான். இன்னதென்று கண்டுபிடிக்க முடியவில்லை. வைத்தியன் எல்லோருக்கும் தைரியம் சொல்லிக்கொண்டே வருகிறான். ருக்மிணியும் மற்றவர்களும் தவிக்கின்றார்கள்.

இது இங்ஙனமிருக்க, தாமோதரன் தோட்டத்து வழியாக நடக்கமாட்டாமல் நடந்து சென்று கொண்டேயிருக்கிறான். தலையில் பட்ட அடியால் உண்டாகிய காயத்தால் ரத்தம் பெருகி முகத்திலும் கழுத்திலும் வழிந்து சொக்காயையும் நனைத்துவிட்டது. அவன் மனம் ராஜத்தின் பிரிவையே எண்ணி எங்கிச் சென்றாலும் தேக பாதையில் அவனை வாட்டத் தலைப்பட்டது. ஜிவ் ஜிவ் என்ற வலி கிளம்பிவிட்டது "ஆகா! என்ன பிறவி பிறந்தோம்! என்ன வாழ்க்கை வாழ்கின்றோம்! சீச்சி! என் உயிரை விடவும் நான் சம்மதிப்பேன். என் காதலியின் பிரிவை மாத்திரம் சகிக்கமாட்டேன். என்னருமைக் கண்ணே!

சஹாறு ராகம்

அன்பே யுருவாய் தேன்போடு தோன்றிய
ஆருயிர்க் கமுதே ! பாரினி லுனக்கு
இணைவே றுண்டோ ஏந்திழை மானே !
ஈசனும் நம்மை மோசமே செய்ய
உள்ளத்தி லெண்ணிக் கள்ளமே செய்து
ஊரையும் துறந்து உன்னையும் பிரிந்து
எண்ணமும் சிதறிக் கண்ணிலான் போ
ஏகிட வைத்தனன் ஈதேன் விதியோ !
ஐயகோ எந்தன் ஆவியும் துடித்து
ஒடுங்கிடும் தருணம் உண்டோ எனக்கு
ஓவியம் போன்ற பாவை உனைநான்
காண்பனோ ? எந்தன் கருணா நிதியே !
காதலின் கிளியைக் கண்கூடு விட்டுப்
பறக்க விடுத்துப் பரதேசி யானேன்
அப்பனே யுன்றன் ஒப்பற்ற அருளும்
இவ்விதமாக இருந்ததோ வறியேன்

என்று லோக சிந்தையாகப் பாடிப் புலம்பிக்கொண்டே வழி நடந்து செல்கிறான். இவன் சாரீரம் சுகமானது. காலம் இரவு. விஷயமும்

சோகம். எல்லாம் ஒருங்கு கூட அவன் தன்னை மீறிப் பொங்கி வரும் துயரத்தினால் தான் எங்குச்செல்கிறோம் என்பதையும் மறந்து சென்றுகொண்டிருக்கிறான். தலையிலிருந்து அடிக்கடி ரத்தம் அதிகமாக வெளிக் கிளம்புகிறது. அதனால் அவனுக்கு நிலைதடுமாற்றமுண்டாக ஆரம்பித்தது. சிறிதுநேரம்சென்றதும் அவன் ப்ரக்ஞையற்று நடக்கும் வழியிலேயே விழுந்து விட்டான். அப்போது சுமார் பத்துமணி இருக்கும். எங்கும் நிச்சப்தமாக இருள் சூழ்ந்துகொண்டிருந்தது. ராயபுரத்தில் ராஜேச்வரி பங்களாவிற்கும் சமுத்திரக் கரைக்கும் சுமார் ஒரு கல் தூரமிருக்கும். ட்ராம் வண்டி செல்லும் பீச்சோரமாயுள்ள ரஸ்தாவில் தாமோதரன் விழுந்து விட்டான். அவ்விடத்தில் பக்கத்தில் சமுத்திரமிருக்கின்றதாகையினால் அலைகள் மட்டும் இரைச்சலிட்டு ஆரவாரிக்கின்றன. அலைகள் கரையை நோக்கி வருவது, தாமோதரனின் பரிதாபகரமான நிலையைக் கண்டு அவனுக்கு உதவி புரிவதற்காக வேகமாக வருவது போலவும் மத்தியில் உடைந்து திரும்புவதானது, அவனது காதல் திறத்தையும் பரிபவமான நிலைமையையும் காண மனம் சகிக்காமல் திரும்பிவிடுவது போலவும் தோன்றுகிறது.

அச்சமயம் தாமோதரனுக்குச் சற்று ப்ரக்ஞை வந்தது. அவனுக்கு ராஜேச்வரியின் நினைவு சதா தோன்றுவதும் அவள் எதிரில் நிற்பது போலவுமே தோன்றுகிறது. அவளால் கொடுக்கப்பட்ட தங்கச் சங்கிலியின் நினைவுவந்தது. ஜோபியிலிருந்து அதை எடுத்துப் பார்த்தான். ராஜமே எதிரில் நிற்பதுபோல எண்ணிச் சங்கிலியை முத்தமிட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டான். அவனுக்கு மயக்கம் வந்தபடியே இருந்தது. "இந்த நிசிவேளையில் நிலைதடுமாறிய என்னிடம் இத்தனை உயரிய விலையுள்ள சங்கிலியிருப்பது எனக்கு மிகுந்த அபாயத்தையல்லவா விளைவிக்கும். நான் இதை வைத்துக்கொண்டு மூர்ச்சித்தால் இதை நான் களவாடியதாக என் காலவிதியால் எண்ணுவதும் கூடுமன்றோ! நாம் உடனே இதைப் பத்திரப்படுத்தி இத்தனை பெரிய பொருளை அவளிடமே சேர்த்துவிட வேண்டும். ஏதேனும் சிறிய அற்பவஸ்து கிடைத்தாலும்போதும். என் தலை சுற்றுகின்றது. அதோ செல்லும் ட்ராம்வண்டியில் நாம்

ஏறிச்செல்வோ மென்றால் ; நமது ரத்தத்தைக் காண்பவர் சந்தேகப் பட்டுப் பல கேள்விகள் கேட்பார்கள். ஆதலால் நாம் மெல்ல நடந்து சென்று நமது வீட்டை யடைவதே நலம். இல்லையேல் இவ்விடமே இதை எங்கேனும் மறைத்து வைக்கவேண்டும். நடு ரஸ்தாவில் நான் எங்கு வைப்பேன்?'' என்று வெகுநேரம் யோசிக்கின்றான். இடையே சோர்வு உண்டாய்ச் சாய்கிறான். இவ்விதமே மெல்ல எழுந்து நடந்து தள்ளாடியபடியே சென்று அருகிலுள்ள வீதிக் குழாயில் முகத்திலுள்ள ரத்தத்தை அலம்பிக் கொண்டு பதினோரு மணி சுமாருக்குத் தன் வீட்டை யடைந்தான். வீட்டில் தனது வளர்ப்புத் தாய் தகப்பன் யாருமில்லாதது அப்போதே அவன் நினைவிற்கு வந்தது. வீதிப்பக்கமுள்ள ஜன்னல்வழியாகக் கையிலிருந்த சங்கிலியை வீசி எறிந்துவிடத் தீர்மானித்துக்கொண்டு தன்கைக்குட்டையில் சங்கிலியை வைத்துமுடிந்து ஜன்னல் வழியாகத் தனது புத்தகம் வைக்கும் பீரோவின் மேல் பாகத்தில் வீசி எறிந்துவிட்டு வீதித் திண்ணையில் படுத்துக் கொண்டான்; நாவறட்சியைத் தாங்கமாட்டாமல் தவித்தான். பிரட்டல் உண்டாக ஆரம்பித்தது. தெருக்கோடியிலிருக்கும் குழாயருகில் சென்று நீரருந்தி வருவதென்று தனக்கு வேண்டிய அளவு நீரையுட்கொண்டான். அன்று அவன் அடைந்த கஷ்டத்தினால் தண்ணீர் குடித்ததும் களைப்பு மேலிட்டுக் குழாயினருகிலேயே மீண்டும் விழுந்துவிட்டான்.

அப்போது கிழவி யொருத்தி அங்கே குழாயருகில் வந்தாள். அங்கு தாமோதரன் விழுந்து கிடப்பதைக் கண்டு கூச்சலிட்டாள். அங்கு அக்கம் பக்கம் உள்ள எல்லோரும் ஓடிவந்தார்கள். "யாரோ விழுந்து விட்டானே ! விழுந்து விட்டானே !'' என்று பெரும் சத்தமிட்டார்கள். சிலர் தாமோதரனைத் தூக்கி அருகிலிருந்த திண்ணையில் போட்டுப் பார்த்தார்கள். தலையிலிருந்து ரத்தம் கசிந்தபடியே இருக்கின்றது. முதுகில் ரத்தம் கசிகின்றது. இவைகளைக் கண்டவனையோரும் விஷய மின்னதென்று அறிந்துகொள்ள மாட்டாமல் மனிதன் யார் என்பது விளங்காது தவித்துத் திகைத்துவிட்டார்கள். உடனே அவர்கள் ஒன்றுகூடி யோசித்து இவனை முதலில் வைத்திய சாலைக்கு அனுப்புவதென்று தீர்மானித்துக் கொண்டு எங்கேயோ

தேடியலைந்து ஒரு வண்டி கொண்டுவந்து அதில் தாமோதரனை எடுத்துப் போட்டுக்கொண்டு போய் வைத்தியசாலையில் விட்டு நடந்த விஷயத்தைத் தமக்குத் தெரிந்தமட்டில் வைத்தியரிடம் கூறி முடித்தார்கள். வைத்தியர் "இவனுக்குத் தெளிவு வந்தபின் இவனை இன்னானென்று விசாரித்துக் கொள்கிறேன்" என்று சொல்லி வந்தவர்களை அனுப்பிவிட்டுத் தாமோதரனின் மண்டையின் காயத்தைப் பார்த்தார். வைத்தியருக்கே நடுக்க முண்டாய்விட்டது. அவன் தலையில் தடியால் இருமுறை ஓங்கியடித்ததில் பெருத்த பிளவுடன் காய முண்டாய் அதிகமான ரத்தச் சேத மேற்பட்டதாகவும் இது யாரோ வேண்டுமென்றே அடித்ததான காயந்தானென்றும் தெரிந்து கொண்டார். முதுகிலும் காயத்தழும்புகள் இருந்தபடியால் இவனை யாரோ முரடர்கள் அடித்துவிட்டதாயும் அதனால் மூர்ச்சித்து விட்டானென்றும் தீர்மானித்துக்கொண்டு மருந்து கொடுத்து வந்தார். காயங்களுக்கும் மருந்திட்டுக் கட்டுக் கட்டினார். இரவு முற்றும் தாமோதரன் கண் திறக்கவே இல்லை.

மறுநாள் காலையில் 8 மணிக்குமேல் அவனுக்கு மயக்கம் சற்றுத் தெளிய ஆரம்பித்தது. வலி உபத்திரவம் ரண இசுவுகண்டு தாங்க மாட்டாமல் அலற வாரம்பித்தான். இவனுக்கு சற்றுத் தெளிந்தவுடன் வைத்தியர் இவனை "நீ யார்? உன் பெற்றோர்கள் எங்கு இருக்கிறார்கள்? உனக்கு நேர்ந்த ஆபத்தென்ன? இப்படிப்பட்ட கஷ்டம் உனக்கெப்படி வந்தது?" என்று கேட்டார். வைத்தியர் கேட்பதெல்லாம் தாமோதரனுக்குத் தெரிகின்றது என்றாலும் வலியின் பாதையால் அவருக்குப் பதிற் சொல்ல முடியவில்லை. அவன் என்ன ஜாக்ரதையாக விருந்தாலும் ராஜேச்வரியின் பேச்சும் பெயரும் வாய் தவறி வெளிப்பட்டு விடுகின்றன. அவைகளை மெல்ல அடக்கிக் கொண்டு பேசத் தொடங்கி, "ஐயா! அரமனைக்கார தெருவிலிருக்கும்........நம்பர் வீட்டில் வடிவேல் ரெட்டியாருடைய வளர்ப்புப் புத்திரன் யான். நான் கடற்கரைசென்று திரும்புகையில் யாரோ நான்கு முரடர்கள் என்னிடம் பொருளிருப்பதாக எண்ணி என்னை அடித்து உபத்திரவித்த பின்னர் என்னிடம் யாது மில்லாதது கண்டு என்னைக் கடற்கரையிலேயே போட்டுப் போய்விட்டார்

கள். நான் மெல்ல சற்றுநேரங்கழித்து எழுந்து வருகையில் ஒரு குழாயினருகில் நினைவற்று விழுந்துவிட்டேன். பின் இன்றே விழித்தேன்; என்னை யார் இங்கு கொண்டுவந்து விட்டார்கள்?'' என்று வினவினன். வைத்தியர் அவனிடம் அவன் அங்கு வந்த விவரத்தைத் தெரிவித்துப் பின் அவன் கொடுத்த விலாசதாருக்கு ஆள்மூலம் செய்தியனுப்பினர்.

பாதை அதிகரிக்க அதிகரிக்க தாமோதரன் எண்ண முற்றும் மாலை நடந்த நாடக மேடைமேலேயே சென்று தாவுகின்றது. ராஜேஸ்வரியினிடம் கொண்ட காதலுக்கு வெகுமானமாகத் தனக்கு இவ்விதமான இசுவு ஏற்பட்டதாக எண்ணினன். "ஆகா! ராஜம் விழுந்து விட்டாளே! எப்படியானளோ! மூர்ச்சை தெளிந்ததோ, இல்லையோ! அவளுடைய நிலைமையை அறியமாட்டாமல் நாம் தவிப்பது போல ராஜமும் நம்மை எண்ணியே தவிப்பாளல்லவா! ஆகா! ஈசா! எங்களிருவருக்கும் மத்தியில் காதல் என்னும் செடியை வளர்த்துப் பின் அதனை ஏன் வெட்டிவிட முயற்சித்துவிட்டாய்! இவ்விதம் செய்து வேடிக்கை பார்ப்பதில் உனக்கு இன்பமா? ஆகா! என் ராஜரத்தினத்தை நான் எவ்விதம் மறந்து உயிர்தரிப்பேன்? என் இன்பவடிவத்தைக் காணுது நான் எவ்விதம் உடல் சுமப்பேன்? அடடா! என்ன அதிர்ஷ்டஹீனம்! ஐயோ! என் கண்மணி அத்தானென்று கூவியழைப்பது போல் தோன்றுகின்றதே! திரும்பிப் பார்த்தால் ஒன்றுங் காணவில்லையே! விதித்த விதியின்படி நடக்குமே தவிர அதற்கு மாறாக எதுவும் நடக்காது. இதனாலல்லவா "விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்'' என்றார்கள் பெரியோர். சென்ற ஜன்மத்தில் யான் எந்தக் காதலரைப் பிரித்து வைத்தேனோ இந்த ஜன்மத்தில் யான் இந்த வித விசனத்துக்குள்ளானேன். எது எவ்விதமாயினும் என் ராஜம் ஒருவிதக் குறையுமின்றிச் சுகமாயிருந்தால் அதுவே எனக்கு சந்தோஷம்'' என்று பலவாறாய் எண்ணியவனாய்ப் புரளுகிறான்; வலியின் உபத்திரவத்தால் துடிக்கின்றான்.

இவன் வீட்டிற்கு ஆளையனுப்பியதும் பகல் 11 மணி சுமாருக்குக் கோமளவல்லியும் வடிவேல்ரெட்டியாரும் வைத்தியசாலைக்கு

வந்தார்கள்; வளர்த்தபாசத்தினுல் தாமோதரனை விசாரித்துக்கலங்கினுர்கள். தாமோதரன் வைத்தியரிடத்தில் தெரிவித்தபடியே இவர்களிடமும் தெரிவித்தான். அதையே அவர்களும் உண்மை என எண்ணினுர்கள்.

தாமோதரனுக்கோ ராஜத்தின் நிலைமையை அறிய ஆவல் தூண்டுகின்றது. அவ்விடத்துச் செய்தியைத் திடீரென்று எவ்விதம் கேட்பதென யோசித்து மெல்ல கோமளவல்லியை நோக்கி, "அம்மா! தங்களை இதற்குள் மாமியும் ராஜமும் அனுப்பிவைத்தார்களா ?" என்று அவன் தந்திரமாகக் கேட்டான்.

கோமள:—உம். நீ நேற்றுச் சாயந்திரமே வந்து விட்டதனுல் அவ்விடத்துச்செய்தி நீ யாதுமறியமாட்டாய். நேற்று பாட்டுக்கச் சேரி முடிவதற்குள் ராஜம் தோட்டத்துக்குச் சென்றுளாம். அங்கு தடுக்கி விழுந்தாளாம்; அப்பொழுது மூர்ச்சையாய் விட்டாளாம். பின் உன் மாமா அவளை அகஸ்மாத்தாகக் கண்டு கூச்சலிட்டார்களாம். பின் அவளை உள்ளே கொண்டுபோய் வைத்தியரைத் தருவித்துச் சிகிச்சை செய்கிறுர்கள். இன்னும் அவளுக்கு ப்ரக்ஞையே வரவில்லை. நர்ஸ் வைத்திருக்கிறுர்கள்; ஜுரமும் கண்டு விட்டது. உன் மாமா அவளருகிலும் செல்லவில்லை. ருக்மிணிதான் தவிக்கின்றுள். பாவம்! காலை ஒன்பது மணிக்குமேல் எனக்கு உன் செய்தி வந்ததும் நான் வந்துவிட்டேன். அவள் விழுந்ததும் பயந்துவிட்டாளென்று கூறுகிறுர்கள். நான் ருக்மிணியோடு சொல்லிக்கொண்டே வந்துவிட்டேன். ராஜம் எவ்வித மிருக்கின்றுளோ!" என்று கோமளவல்லி சொல்லிக் கொண்டிருக்கையில் தாமோதரனுக்குக் குழப்பம் அதிகரித்துவிட்டது. "ஐயோ! ராஜத்தின் நிலைமை எவ்விதமிருக்கின்றதோ, என்னமோ தெரியவில்லையே! அவளுடைய தேக அசௌக்யத்துக்குக் காரண பூதம் நானல்லவா! ஐயோ! என் கண்ணே! ராஜம்! ராஜம்!" என்று தனக்குள் பேசியபடியே கண்களை மூடிப் படுத்துவிட்டான். பின்னும் சற்றுநேரத்திற்கெல்லாம் கோமளவல்லி எழுந்து போய்விட்டாள்.

ருக்மிணி ராஜத்தின் உண்மையான நிலைமையை அறியாது புலம்பித் துடிக்கின்றாள். திடீரென்று இவ்விதமான ஆபத்து வந்து விட்டதே என்ற கவலையில் அவள் அங்கு கூடியிருக்கும் விருந்தாளிகளையும் கவனிக்க மறந்தாள். அவளுடைய கவன முற்றும் ராஜேச்வரியின் மீதே சென்று போராடுகின்றது. கண்ணபிரானுக்கு நடந்த விஷயம் தெரிந்தும் அவன் அதை ருக்மிணியிடமும் தெரிவிக்கவில்லை. ராஜம் தான் படுத்திருக்கும் அலங்கோலத்திலும் "அப்பா! வேண்டாம், அத்தானை அடிக்காதீர்கள்" என்று வாய்விட்டுப் பிதற்றுகின்றாள். இந்த வார்த்தையைக் கேட்ட ருக்மிணிக்குச் சந்தேகங்கள் பல ஏற்பட்டன. இவற்றை நிவர்த்திக்கும்பொருட்டுக் கண்ணபிரானைத் தனித்துச் சந்தித்து "குழந்தை இவ்விதம் பிதற்றுகின்றாளே! இதென்ன காரணம்? அப்பா அடிக்கவேண்டாம் என்பதையும், தாமோதரன் காணாமலிருப்பதையும் கவனித்தால் எனக்குச் சந்தேகமதிகரிக்கின்றது. விஷயமின்னதென்று தெரிவிக்கலாகாதா!" என்று கெஞ்சி மன்றாடினாள். இதைக்கேட்ட கண்ணபிரான் கோபங்கொண்டு "ருக்மிணி! எல்லாக் கோளாருக்கும் நீ தான் காரணம். உன்னுடைய செல்லத்தினாலேயே காரியம் மிஞ்சிவிட்டது" என்று கடிந்துகொண்டு நடந்த விஷயத்தைக் கூறினான்.

இதைக்கேட்ட ருக்மிணிக்குத் தாங்கவியலாத மனத்தாங்கல் உண்டாயிற்று. "ஐயோ! ஈச்வரா! இவ்விதமுமா நடக்கவேண்டும்! பெண்ணைக் கொடுக்க உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் அதை மறுக்கலாமேயன்றித் திக்கற்ற பரதேசியாகிய தாமோதரனை ஏன் அடிக்கவேண்டும்? ஆகா! இப்போதல்லவோ விஷயம் தெளிவாக விளங்குகின்றது. இப்போதுதான் ஓர் ஆள் வந்து யாரோ முரடர் தாமோதரனை அடித்து மண்டையை உடைத்து விட்டார்களென்றும் அதனால் அவன் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறானென்றும் சொல்லி உங்கள் தமக்கையை அழைத்துச் சென்றான். அந்த வேலையை நீங்களா செய்துவிட்டீர்கள்? ஐயோ. அநியாயமே! நம்மால் உபகாரமில்லாவிடினும் உபத்திரவம் உண்டாகவேண்டுமா! அட கஷ்டகாலமே! குழந்தைகளிருவருடைய உயிருக்குமே

விபத்து வந்து விட்டதே" என்று கூறிக்கொண்டே அவ்விடத்தை விட்டுப் போய்விட்டாள்.

நேராக அவள் ராஜேஜஸ்வரியினிடம் சென்றாள். காலை சுமார் பத்து மணியிருக்கலாம். ராஜத்திற்கு மயக்கம் தெளிந்த பாடில்லை. ருக்மிணி விஷயமின்னதென்று அறியாமுன் இருந்த கவலையிலும் அறிந்த பின் உண்டாகிய கவலை அதிகமாகவே பெருகிவிட்டது. "அந்தோ! குழந்தைகளின் மனத்தை யறியாது இவ்விதம் கொலை செய்வாருமுண்டோ! ;ஆ! என்னப்பனே! தாமோதரா! உனது குணத்தழகு ஒன்றே கோடிவிலை பெறுமே! உன்னை மருமகனாக வடையும் பாக்கியம் எந்தப் புனிதவதிக்கிருக்கின்றதோ தெரியவில்லையே! என் ராஜத்தை விரும்பியதற்குப் பலனோ இது? அடடா! என்ன குணம்! என்ன அழகு! உம்" என்று தனக்குள் எண்ணிப் பெருமூச்செறிந்தாள். பின்னர்ச் சற்று நேரங்கழித்து ராஜத்திற்குத் தெளிவுண்டாயது. அவள்கண்களைத் திறக்க ஆரம்பித்தாள். அப்போது "ஆ! அத்தான். என்னைக் கைவிட்டீர்களா! உம்மைக் கைவிட்டேனா?" என்று பெரிய சத்தமிட்டுக் கத்திவிட்டாள். ருக்மிணி அதைக்கேட்டு இன்பப் பெருக்கினால் கண்ணீர் வழிய ராஜத்தருகில் சென்று "என் கண்ணே! உனக்கென்ன செய்கிறது? உனக்குத் திடீரென்று யாதுற்றது? என்ன காரணமாகத் தோட்டத்தில் விழுந்து விட்டாய்?" என்று கேட்டாள்; சிறிதளவு பாலை உட்செலுத்தினாள். மீண்டும் அரைமணி சென்றதும் ராஜம் நன்றாக விழித்துக் கொண்டாள்; தான் தனதறையில் படுத்திருப்பதை நொடியிலறிந்து கொண்டாள்; தனக்கெதிரில் தன் இன்பவடிவின்றித் தன் தாய்மட்டும் ஒரு தாதியுட னிருப்பதைக் கண்டாள். தாதியைப் பார்த்த பின்னரே தனக்கு மன அதிர்ச்சியினால் தேக அசௌக்யம் உண்டாய்விட்டதென்று அறிந்து கொண்டாள். அவளுக்கு முதல் நாள் மாலையில் நடந்த விஷயங்களே கண்ணெதிரில் தோன்றிக்காட்சி அளிக்கின்றன. தாமோதரன் ரத்தம் ஒழுகத் தன் தந்தையை வேண்டிக்கொண்டதை எண்ணக் கண்ணீர் தானாகவே வருகின்றது. இவைகளை அடக்கிக்கொண்டு மெல்லத் தன் தாயை அழைத்து அருகிலமரச் செய்து மெல்ல பேசத் தொடங்கி,

182843

"அம்மா! அத்தை அவர்கள் எங்கே? அத்தான்.......(கண்ணீர் பெருகுகின்றது.) எங்கே? தற்போது இரவா பகலா?" என்று கேட்டாள்.

இதைக்கேட்ட ருக்மிணியும் கண்ணீர் வடித்தபடியே தாமோதரனின் செய்தியை இப்போது அவளறிந்தால் மிக்க கவலைக்கிடமான நிலையை அடைவாளென்று கருதி அதை மறைத்துப் பேசத் தொடங்கி, "அம்மா! அத்தை இப்பொழுது தான் வீடு சென்றூர்கள். நான் உன்னுடைய இந்த நிலைமையைக் கண்டதுமே தாமோதரனைக் கவனிக்கவில்லை. அவர் வீடு சென்றிருப்பார் என்றே எண்ணுகிறேன். அதையெல்லாம் நீ ஏன் யோசிக்கிறுய்? உனக்குத் திடீரென இப்படி மயக்கமுண்டாவானேன்?" என்று வார்த்தையைத் திருப்பினுள்.

தன் அத்தை வீட்டுக்குச் சென்றுளென்று கூறக் கேட்டதும் ராஜம் "அத்தானின் கதி என்னவோ தெரியவில்லை. அதனுல் தான் அத்தை என்னை இன்னிலைமையில் விட்டுப் பிரிந்திருக்கிறூர்கள்" என்று கருதித் தாயாரை நோக்கி, "அம்மா! என் தேக அசௌக்கியத்தைக் குறித்து அப்பா தமக்குத் தெரிவித்திருக்கலாமென்று எண்ணுகிறேன். அம்மா! அத்தானின் செய்தி ஏதேனும் தெரியுமோ? அவர் உயிருடன் இருக்கிறுரா? தெரிவியுங்கள். அம்மா! அவருக்கு நேற்று ஒருகண்ட நாளென்றே நான் எண்ணுகிறேன்" என்று கூறும்போதே அவள் கண்ணில் நீர் பெருகி வழிகின்றது. தாயுடன் நடந்தவற்றை உள்ளபடி உரைக்கவும் அவளுக்கு மனந்துணியவில்லை. அத்தான் பழி முற்றும் தன் மீதே ஏற்றுக் கொண்டு, தன்னைக் காத்திருக்கையில் அதையே தானும் கூறி ஸ்தாபிக்காவிடின் அத்தான் வார்த்தைக்கு மதிப்பு குறைந்து இன்னும் த்வேஷம் அதிரிக்கும் என்று எண்ணியவளாய் வாளாவிருந்துவிட்டாள்.

இதுகேட்ட ருக்மிணி கலங்கியபடியே, "அம்மா, ராஜம்! உன் பிதாவினுல் செய்தி முற்றும் அறிந்தேன். என் கண்ணே! நீ சொல்லியதுபோலத் தாமோதரனுக்கு நேற்று பெரிய கண்டக்

தான். ஆனுல் இன்னும் அவன் அந்த கண்டம் தீர்ந்து எழுந்த பாடில்லையாம். நினைவற்று உணவின்றி ஆஸ்பத்ரியில் படுத்திருக் கிருனும். அதை உனக்குத் தெரிவிக்கலாகாதென்று எண்ணி னேன். உனது மனோ வேதனையானது அவனைப் பற்றியே இருப் பதால் அதைக் கூறினேன். இது செய்தி தெரிந்தே அத்தை அவர் கள் அலறிக்கொண்டே அங்குச் சென்றிருக்கின்ருர்கள். முதலில் எனக்கிந்த விவரம் தெரியாதாகையால் என்ன வந்துவிட்டதோ என்று நான் நடுங்கினேன். பின்னர் விஷயமறிந்ததும் என் மனம் படும்பாடு இவ்வளவவ்வளவல்ல. அதை ஈசனே அறிவார். ஐயோ ! என் கண்ணே! உன்னையவன் கடவுளறிய உண்மையாகக் காதலித் தான். அதற்கு உன் பிதா இப்படிப்பட்ட தண்டனை செய்தது தகாது. என்னுள்ளம் துடிக்கின்றது; என்ன செய்வேன். அவன் நிலைமை எவ்விதமிருக்கின்றதோ! மனதில் அவன் என்ன எண்ணு கிருனோ ! எப்படி தவிக்கின்ருனோ !'' என்று கூறிக்கொண்டே கண் ணீரைத் தாரை தாரையாக உதிர்த்தாள்.

தாமோதரனின் வரலாற்றைக் கேட்ட ராஜத்திற்கு அடக்க இயலாத துக்கம் பொங்கி வந்துவிட்டது. ''ஆ! என் உயிரினும் உயரிய அத்தான்! இப்பாவியிடம் தாங்கள் கொண்ட காதலுக்கு இது தான் பரிசோ! ஐயோ! பாவி ராஜத்தினுலன்ருே இந்த விபத்து நேர்ந்ததென்று மனதில் எண்ணுகிறீர்களோ ? ஆ! தங்கள் காலிலுள்ள தூசியும் இவ்விதம் எண்ணுதென்பதை யானறிந்தும் இவ்விதம் நினைக்கலாகுமா ! என்ன மதியீனம்! நானே சென்று அவரை வலுவிலழைத்து அவருக்கு மண்டை உடையும்படியான ஆபத்தை விளைவித்தேன். அந்தப் பாதகம் என்னுயிரை நீத்தாலும் தொலையுமோ? ஆ! அத்தான்! இனித் தம்மைப் பார்க்க இப்பாவிக்கு பாக்யம் இந்த ஜன்மத்தில் கிட்டுமோ? அடடா! என்ன அபாக்யஞ் செய்து பிறந்து விட்டேன்? ஐயோ! எனக்கிப்போதுற்ற நோயே பல மடைந்து என்னுயிரைப் போக்கிவிடலாகாதா! என்ன செய்வேன்?'' என்று தனக்குள் எண்ணிப் புலம்பியபடியே கண் திறக்காமல் மௌனம் சாதித்துவிட்டாள்.

ராஜத்தின் நிலைமையைக் கண்ட ருக்மிணி அவளுடைய மனோ பாவத்தையும் துயரத்தையும் ஒரு நொடியில் அறிந்துகொண்டு விசனித்தாள் "வேறு எந்த விஷயமாயினும் நாம் தேற்றவும் ஆற்றவும் கூடும். தெய்வீகமாக உண்டாகிய காதல் விஷயத்திற்கு யாரால் என்ன செய்தாலும் தீருமோ! ஆறுமோ! ஐயோ! பெற்ற குழந்தைக்குச் சத்துரு பெற்றோரேயானால் என்ன விதமான உதவியை அக்குழந்தை எதிர்பார்க்கும்? ஐயோ! ராஜத்தின் பரிதாபம் மிகவும் விசனிக்கத் தக்கதாக இருக்கின்றதே! என் செய்வேன்? இவள் சார்பில் நான் பரிந்து பேசி வேலையை முடிப்பதற்கு முரட்டுச் சுபாவமுள்ள இவள் தந்தை இடங்கொடாரே. மேலும் வேலையும் வெகு ஒழுங்கீனமாயும் முகத்திலும் விழிக்கமாட்டாத வகையிலும் எக்கச்சக்கமாக நடந்துவிட்டதே! என் குழந்தையின் மனப்படி நடக்கப் பிராப்தமில்லை என்பதற்கு இதுவே ஒரு துர்ச்சகுனம் போல ஆகவில்லையா! என்ன செய்வேன்?" என்று ஏங்கித் தவித்த வண்ணம் ராஜத்தை நோக்கி "அம்மா! குழந்தாய், உன் வாயினின்றும் பேச்சுகள் பிறக்காவிடினும் உன்னுடைய மனக்கிலேசத்திற்குக்காரணத்தை நான் அறிந்தேன். என்செய்வேன் என் கண்ணே! உனது தேகசுகத்திற்குக் கேடு நேரிடுமே! அம்மா! எதையும் எண்ணாதே! தாமோதரனின் அருள்பூர்ணமாகவிருந்தால் இந்தத் தாமோதரனையே நீ மாலையிடுவது திண்ணம். அம்மா! இந்த மருந்தைச் சாப்பிடு" என்றாள்.

மகா பொறுமைசாலியாகிய ராஜம் மருந்தை யுட்கொண்டு மறுபடியும் படுத்துவிட்டாள். தாமோதரனால் தனக்கு கொடுக்கப்பட்ட பெரிய கடிதத்தைத் தன் மடியிலேயே வைத்திருப்பது அவளுக்குச் சந்தோஷமாயிருப்பினும் பிறர் கண்டுவிடப் போகிறார்களே என்ற பயம் ஒருபுறம் அவளைப் பாதிக்கின்றது. மெல்லத் தன் தாயிடம் தனது கைப்பெட்டியைக் கொண்டு வரும்படி தெரிவித்தாள். தாயும் சிறிதான அந்த தந்தப் பெட்டியைக் கொண்டு வந்தாள். அதை ராஜம் வாங்கித் தன்னிடமே யுள்ள சாவியினால் அதைத் திறந்து கடிதத்தைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டித் தாயினிடம் கொடுத்தாள். ருக்மிணியும் அதை வாங்கி

முன் வைத்திருந்த இடத்தில் வைத்துவிட்டு வந்தாள். ருக்மிணி புத்திசாலியாகையால் ராஜம் பெட்டியில் தன் காதலன் விஷயமாய் ஏதோ வைத்திருப்பாள் அதை நாம் கேட்பது கூடாது என்று பராக்காயிருந்துவிட்டாள்.

கண்ணபிரானுக்கு ராஜத்தின் மேலுள்ள ஆத்திரத்தினுல் அவளை வந்து அவன் பார்க்கவே இல்லை; தூரவிருந்து ஆட்கள் மூலமாயும் ருக்மிணியின் மூலமாயும் விசாரித்துக்கொண்டு போவதோடு நின்றுவிட்டான். ருக்மிணிக்கோ ஆஸ்பத்ரிக்குச் சென்று தாமோதரனைப் பார்த்து விட்டு வரவேண்டு மென்கிற அவா. அதற்குத் தன் நாயகன் சம்மதிக்க மாட்டான் என்பதை அவளறிவாளாகையால் மெல்லவும் மாட்டாமல் சொல்லவும் மாட்டாமல் இருக்கிறுள். ராஜத்திற்கு அன்று படிப்படியாக நோய் குணமாய்க்கொண்டே வந்துவிட்டது. அன்று செல்ல மறுநாள் அவள் தானே எழுந்திருக்கவும் உட்காரவும் மெல்ல நடக்கவும் தலைப்பட்டாள். எனினும் தாமோதரனைப்பற்றிய கவலை அவளை விட்டகலவில்லை. தான் சென்றும் பார்ப்பதற்கில்லை. அவன் தேகநிலை எவ்விதமிருக்கின்றதோஎன்ற கவலையாகவே அவள் இருக்கிறுள்.வெகுநேரம் யோசித்துப் பின் தன் தாயை அழைத்து, "அம்மா! கலியாணத்திற்கு வந்திருந்தவர்களெல்லோரும் போய் விட்டார்கள். தாங்களேனும் அப்பாவுக்குத் தெரியாமல் ஆஸ்பத்திரிக்குச் சென்று அத்தானை விசாரித்து அப்பா செய்த காரியத்திற்குத் தேறுதல் கூறிவிட்டு அவருடைய நிலைமை எவ்விதமிருக்கின்றது என்று விசாரித்து வந்தால்தானே அவருக்குச் சற்றுச் சந்தோஷமாகும். நேற்று அப்பா வாயில் வந்தவாறெல்லாம் அநாதை என்றும் பநாதை என்றும் திட்டியதற்கு நாமும் எட்டிப் பாராதிருந்தால் அவர் மனம் புண்பட்டு விடாதா! நம்மால் அவர்க்குச் சுகமில்லாவிடினும் துக்கமில்லாதிருக்கவாவது பார்க்கவேண்டுவது நமது கடமையல்லவா? இன்று தாங்கள் சென்று பார்த்து வருகின்றீர்களா! தமக்குத் தெரியாதென்று யான் கூறுவதாக எண்ணக்கூடாது" என்று மேலே சொல்வதற்குள் ருக்மிணி ஆநந்தக் கண்ணீர் பெருகப் பேசத் தொடங்கி "என் கண்ணே! வாஸ்தவத்தில் உனக்குத் தெரிந்தவளவு எனக்குத்

தெரியவே தெரியாது. ஆனல் அதை யானே வெளியிடுவதழகன்று. நீ சொல்வதற்கு முன்னமேயே அவனைப் பார்க்கவேண்டுமென்று என் மனம் துள்ளுகின்றது. நானும் உனக்கும் தெரியாது செய்து பின் தெரிவிக்க எண்ணினேன். நீயே கூறிவிட்டாய். நான் கட்டாயம் இன்று சென்று வருகிறேன். கவலைப்படாதே!'' என்று தேற்றினள். அன்று பிற்பகல் நான்கு மணிக்கு ருக்மிணி ராஜத்தினிடம் சொல்லிக் கொண்டு ஜாக்ரதையாக இருக்கும்படி கூறிவிட்டுத் தன் சொந்த மோட்டாரில் அமர்ந்து வண்டியை ஜனரல் ஆஸ்பத்ரிக்கு விடச்சொல்லித் தான் அங்குச் சென்றதாகத் தெரிவிக்க வேண்டாமென்று வண்டியோட்டியுடனும் தெரிவித்து விட்டாள். வண்டியும் சென்று ஆஸ்பத்திரியை அடைந்ததும் ருக்மிணி தன் கையில் கொண்டுவந்த சாமான் மூட்டையை எடுத்துக்கொண்டு தாமோதரன் படுத்திருக்குமிடத்தை விசாரித்துக்கொண்டு அங்குச் சென்றாள். அந்தோ! தலையிலும் முதுகிலும் கட்டுகள் கட்டிக்கொண்டு தாமோதரன் அலங்கோலமாய்ப் பரிதாபகரமான முகத்தோற்றத்துடன் படுத்திருப்பதைக் கண்ட அவள் வயிறு கொதிக்கவாரம்பித்தது. "ஐயோ! நம்மாலன்றோ இவனுக்கு இத்தகைய ஆபத்து வந்துவிட்டது, என்று பதறினள். கண்ணில் நீர் தளும்பமெல்ல நடந்து தாமோதரனருகில் சென்று நின்றாள். தாமோதரனின் கண்கள் மூடியிருப்பினும் அருவிபோல நீர் வழிந்தவாறிருப்பதால் அவன் தூங்கவில்லை என்பதை உணர்ந்துகொண்ட ருக்மிணி மெல்லிய குரலால் "தம்பி! தாமோதரா!'' என்று குயில் போன்று மொழிந்தாள்.

ஆகா! தாமோதரனைப் பொறைக்கிருப்பிடமென்று கூறலாம். தனது உயிர்போகும் பாதையிலும் தன் மனத்திற்கு ஆநந்தத்தையுண்டாக்கும் சக்திவாய்ந்த தன் காதல் கண்மணியாகிய ராஜத்தையே எண்ணி அவளுடன் பேசுவது போலும் இனிமையான அவளது மொழியைக் கேட்டு ஆநந்தப்படுவதுபோலும் வெகு சாதுர்யமாகப் பேசுவதைக் கேட்டு:மட்டற்ற மகிழ்ச்சி யடைவதுபோலும் தனக்குத்தானே இன்பத்தோற்றங்களை எண்ணி அப்படியே பரவசமாக ஆநந்தக் கண்ணீர் பெருக்கியபடியே தன் நோயைச் சாந்தி செய்

யும் மருந்து இதுவென்றெண்ணிப் படுத்திருந்தான்; அதே தருணம் ருக்மிணி அழைத்த குரல் இவன் செவியில் பட்டதும் திடுக்கிட்டு எழுந்தான். ஏனெனில் ராஜத்தின் குரலும் அவள் தாயின் குரலும் சற்றேறக்குறைய ஒன்றாகவே இருக்குமாதலால், இவன் அந்தக் குரலின் ஒலியை எண்ணி ஆநந்தப்படுகின்ற தருணம் அதே குரல் போலக் கேட்டதும் ராஜந்தான் ஒருகால் வந்துவிட்டாளோ என்று எண்ணித்திடுக்கிட்டு விழித்துத் தன் விழியின் நீரைத் துடைத்துக் கொண்டு பார்க்க, தன் காதலியை ஈன்ற புனிதவதி எதிரில் நிற்பதைக் கண்டு தன்னைமீறிய வியப்புடன் ஒருகால் ராஜமும் வந்திருப்பாளோ என்று சுற்றும் இமைப்பொழுதில் பார்த்து இல்லாததறிந்து உள்ளுக்குள் வாட்டங்கொண்டு அதை அடக்கியவனாய்ப் பேசத் தொடங்கி மெல்லிய குரலால் தாழ்ந்த மொழியாய், "மாமி! வாருங்கள்; உட்காருங்கள். ஏது இவ்வளவு தூரம் வந்தது? மாமி! தமது குமாரத்திக்குத தேக அசௌக்கியமென்று நேற்று அம்மாள் தெரிவித்தார்கள். இப்போது தாங்கள் வந்திருப்பதிலிருந்து குணமாகவே இருக்கலாம் என்று எண்ணுகிறேன். உடம்பு சரியாய் விட்டதா?" என்று தன்னுடைய நிலைமையையும் கவனியாது விசாரித்தான்.

இதைக்கேட்ட ருக்மிணி தாமோதரனின் உன்னத குணத்தையும் பெருந் தன்மையான போக்கையும் நோக்கி உள்ளம் மகிழ்ந்து பூரித்தபடியே, "அப்பா தாமோதரா! உனதன்பின் பெருக்காலும் ஈசனின் அருளாலும் தற்போது ராஜம் குணமடைந்தாள். உன்னுடைய நிலை எவ்விதமிருக்கின்றதப்பா! காயங்கள் பலமாக இருப்பதாகக் கட்டுகளிலிருந்து தெரிகின்றதே! ஆ! என்னப்பனே! தாமோதரா! நான் என்னவென்று பேசுவேன்! எனக்கொன்றும் தோன்றவில்லை! அப்பா! உன் உயிருக்கு சத்ரு உன் காதலியாகிய தானே; காரணமென்றெண்ணியும் கூறியும் ராஜம் புலம்பித் துடிக்கின்றாள். எவ்வளவு மன்னிப்பு கேட்கமுடியுமோ அத்தனையும் உன்னிடம் கேட்டுக் கொள்ளும்படி ராஜம் என்னிடம் தெரிவித்தாள். தாமோதரா! உனக்கு உன் மாமா இவ்விதம் செய்வார் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. இவையெல்லாம் போதாத

வேளையின் பயனாகும். அப்பா! அவற்றையெல்லாம் நீ மன்னிக்க வேண்டும்'' என்று கண் கலங்கியபடியே கூறிமுடிக்குமுன் தாமோதரன் தணிவான குரலில் பேசத் தொடங்கி "என்னருமை மாமி! கேவலம் அற்பன், அநாதை, பரதேசியாகிய யானா தங்களை மன்னிப்பது? ஐயோ! மன்னிக்கும்படியான குற்றம் யாரும் எதுவும் செய்யவில்லையே! என் பஞ்சபூத சாக்ஷியாக நான் என்னுருயிர் ராஜத்தைக் காதலித்து நேசித்தது உண்மை. அதை என்றும் மறக்க முடியாது என்ற உறுதி என் தேகத்திலேயே என்றும் தழும்பாயிருந்து விளக்கும் பொருட்டு என் மாமா செய்த அடையாளமேயன்றி இவை அடியல்லவே! நான் இவைகளை அடியாகச் சிறிதும் நினைக்கவில்லையே! ஆ! என்னுயுள் பரியந்தம் என் வாழ்நாளின் இன்பத்திற்கு மகிழ்ச்சி மயமாய் இருக்கும் என் காதலியை உற்பத்தி செய்த மாமாவின் கைவரிசையை என் காதல் வரிசையாக வல்லவா நான் கொண்டேன். மாமி! எனக்கு வருத்தமென்பது சிறிதுமில்லை. அதைப்பற்றிச் சந்தேகமே வேண்டாம். நான் காமுகனாகி என் கண்மணியை இச்சித்திருப்பேனே யானால் ஒரு சிறிய வார்த்தையும் பெரிய குற்றமாக ஆய்விடும். மேலும் எனக்குக் கிடையாது போன ஆக்ரோஷத்தினால் நான் தீமைகள் செய்ய முற்பட்டு விடுவேனோ என்னவோ! என்னவோ என்று கூறுவானேன். காமுகனாய் இச்சித்த பொருள் கிட்டாவிடில் அவர்களுடைய உயிருக்கே ஹானிதேடி அடியோடு மடியச்செய்து விடுவது உலக அனுபவமாக விளங்கிவிட்டது. மாமி! நான் ராஜத்தினிடம் கொண்டுள்ளது இயம்புதற்கரிதான காதல்; தெய்வீகமாயுண்டானது. உயிரும் உயிரும் ஒன்று சேர்ந்து லயித்து இன்பமுறச் செய்வது. அது கேவலம் சிற்றின்பத்தைப் பயக்கும் காமமாகாது. என் கண்மணியை யான் அடையாத அபாக்யம் எனக்கு இருப்பினும் அதனால் அவள் மிதித்த மண்ணுக்கும் ஒருவிதக் கலக்கம் உண்டாகக் கண்டு சகிக்க என் காதல் இடந்தராது. மாமி! என் ராஜத்தை நான் இச்சித்தபடி அடைய முடியாமல் அவள் வேறு புருஷனிடம் வாழப் போகின்றாளே வாழ்கின்றாளே என்ற பொறாமை என்மனதில் என் உயிருள்ளளவும் உதிக்காது. எவ்விதமான கஷ்டங்களையோ ஆபத்துக்களையோ யான் அடைந்த

போதிலும் என் ராஜம் சுகமாக வாழ்வதையே என் மனம் கண்டு அளவற்ற ஆநந்தத்தை அடையும். அதுவே என்னுடைய இன்பம்! அதுவே என் பிறவியின் புண்ணியமும் பலனுமாகும். மாமி! நான் ஒரு சிறிதும் கலக்கங்கொள்ளவில்லை என்று ராஜத்தினிடம் தெரிவியுங்கள். என்னைக் காண்போருக்கு எனக்கு அதிகமான வலியின் உபத்திரவமிருப்பதாக நினைக்க இடமிருக்கும். ஆனல் எனக்கு என் காதல் தெய்வமாகிய ராஜேச்வரியின் நாமத்தை எண்ணும்போதே தேகப்பிணியெல்லாம் நீங்கி இன்பம் பெருகுகின்றது. மாமி! இந்த நினைவின் பொருட்டாகத் தாங்களும் என் ராஜமும் கவலை கொள்ளவேண்டாம். எனக்கு ஒருவிதமான கஷ்டமும் இல்லை என்று ராஜத்தினிடம் கூறி அவளைத் தேற்றுங்கள். மாமாவுக்கு என் வந்தனத்தைத் தெரிவியுங்கள். என்னை மீறிச் செய்த அபராதத்திற்கு மன்னித்தருள வேண்டியதாகத் தெரிவியுங்கள்'' என்று இவன் கூறிக்கொண்டே வருகையில் இடை இடையே ஆயாசத்தினுல் அவனுக்குப் பெருமூச்சுண்டாயது. வெயர்வை அரும்பியது. அப்படியும் விடாது அவன் பேசுகிறுன்.

ருக்மிணி அவனுடைய நிலையைக் கண்டவாறிருக்கிறுளெனினும் அவனுடைய உன்னதமான குணவிசேஷத்தினுல் வரும் வார்த்தைகளையும், அவனுடைய அருமையான எண்ணத்தையும், உறுதியான காதலையும், பணிவான சொற்களையும் கேட்கக் கேட்க அவள் மன முருகி பாகாய்ப் பெருகி யோடியது. அதனுல் அவள் சிறுகுழந்தையைப்போல் தேம்பித் தேம்பிப் புலம்புகிறுளே யன்றி அவனைப் பார்த்து நீ பேசாதிரு என்று வாயால் சொல்லவும் அவளால் முடியவில்லை; அவ்விதமிருந்து மெல்லத் தன்னைத் தேற்றிக் கொண்டு புலம்பியபடியே! "அப்பா! என் தாமோதரா! நீயா அநாதை! நீயா பனுதை! உலகத்தில் நரமனுஷ்யாளும்! ஆளை மயக்கும் காசும் இருந்தால்தானு உயர்வு? லக்ஷம் கோடி பணத்தை உன்னுடைய குணத்திற்கு ஈடு செய்தாலும் ஈடாகாதே! எங்கும் நிலவும் சர்வவ்யாபகராகிய பரந்தாமனும் அன்னவர்தேவியுமுள்ள வரையில் நீ என் பரதேசியாக வேண்டு மப்பா! கலங்காதே! ஏகசக்ராதிபத்யம் செய்து நம்மைக் காக்கும் தாமோதரானிருக்

கையில் அவனுடைய நாமத்தைக் கொண்ட உனக்கு ஒரு குறைவும் வராது. உன் மனத்தைத் துன்பப்படுத்திக் கொள்ளாதே யப்பா! கண்ணீர் விடாதே! ரணத்திற்கு அதிர்ச்சி உண்டாகும். இதோ இந்தப் பிஸ்கேட், ரொட்டி இவைகளை வைத்துக்கொண்டு சாப்பிடு. தனித்த ஸ்பெஷல் வார்டில் படுக்காமல் நீ இந்தத் தர்மவார்டில் ஏன் படுக்கவேண்டும்? இங்கு வெகு அசுத்தமாக இருக்கின்றதே! இதோ! இந்த நூறு ரூபாய் நோட்டை உன் செலவிற்கு வைத்துக்கொண்டு ஸ்பெஷல் வார்டில் உன் படுக்கையை மாற்றிக்கொள். நானே அதற்கு வேண்டியவைகளைச் செய்து விடுகிறேன்'' என்று கூறி அருகில் சென்ற நர்ஸை யழைத்துத் தாமோதரனுக்கு ஸ்பெஷல் படுக்கைக்கு ஏற்பாடு செய்யவும் அவனுக்கு ஸர்வ சுகங்களையும் செய்வித்துக் கொடுக்கும்படிக்கும் அவற்றின் செலவு முற்றும் தான் ஏற்றுக்கொள்ளவதாயும் கூறினாள். உடனே நர்ஸ் ஆஸ்பத்திரி அதிகாரியிடம் இந்தத் தகவலைத் தெரிவித்துத் தாமோதரனை ஸ்பெஷல் அறைக்கு மாற்றிவிட்டாள். தாமோதரன் ரூபாயை வாங்க மறுத்துவிட்டான். ருக்மிணி தந்திரக்காரி யாதலால் அங்குள்ள அதிகாரியிடம் நூறுரூபாய் கொடுத்து ''இதை வைத்துக்கொண்டு தாமோதரனுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுங்கள். இன்னும் பணம் தேவையாயிருந்தால் என் பேருக்கு எழுதினால் அனுப்புகிறேன்'' என்று கூறித் திட்டம் செய்துவிட்டாள். பின் ராஜம் பலவந்தமாகக் கொடுக்கச் சொன்னதாகத் தெரிவித்துத் தாமோதரனுடைய கையில், ''உன் செலவிற்கு வைத்துக்கொள்'' என்று 50 ரூ. கொடுத்தாள். தன் காதலி கொடுத்ததை மறுத்தால் மனவருத்தமுண்டாகும் என்று எண்ணி அதை வேண்டாவெறுப்பாய்த் தாமோதரன் பெற்றுக்கொண்டான். தன்பால் மாமி காட்டும் அன்பைக் கண்டுவியந்த தாமோதரன் ''மாமி! தங்களுடைய உபகாரத்திற்கு எவ்விதமான பதிலளிப்பது என்பதே தெரியவில்லை. கேவலம் அற்பனாகிய யான் மீண்டும் என்ன சொல்லக்கூடும்? ஏழையின் நினைவிருக்கட்டும். ராஜத்தைத் தேற்றித் தக்கவிடத்தில் அவளை மணம் செய்வியுங்கள். தந்தையின் இச்சைப்படி நடக்க ராஜத்திற்கு நான் தெரிவித்ததாகச் சொல்லுங்கள். **தந்தைசொல் மிக்க மந்திரமில்லை** என்னும் வாக்கை உறுதியாகக் கொள்ளச் சொல்லுங்கள்.

என் ஆசீர்வாதத்தைத் தெரிவியுங்கள்; என் கண்மணியை நான் சதா என்னிருதயத்தில் வைத்துப் பூஜிப்பதாய்த் தெரிவியுங்கள்'' என்று படபடத்துக் கூறியதும் ஆயாசம் மேலிட்டுக் களைத்துவிட்டான். இதற்குள் எல்லோரும் வெளியே போகவேண்டு மென்பதற்காக அடிக்கப்படும் மணி யடிக்கப்பட்டது. உடனே ருக்மிணி எழுந்து தாமோதரனின் களைப்பை ஆற்றச் சிறிது தீர்த்தத்தை அவன் வாயில் வார்த்தாள்; சற்றுத் தெளிவடைந்த தாமோதரனை நோக்கி, “அப்பா! தாமோதரா! நான் சென்று வருகிறேன். மணியடித்து விட்டார்கள். இனிமேலிங்கிருப்பது தகாது. உடம்பை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள். மாமாவின் செயலை எண்ணாதே! மறந்துவிடு. ராஜேச்வரி தன் வந்தனத்தைத் தெரிவிக்கச் சொன்னாள். பெற்றுக்கொள். உங்கள் சார்பில் ஈசன் தானிருந்து, உங்கள் மனோரதத்தை நிறைவேற்ற வேண்டும். நான் சென்றுவருகின்றேன். நானிங்கு வந்த செய்தி மாமாவுக்குத் தெரியாது. அவரறிய வேண்டாம். ராஜமும் உன் நினைவாகவே இருக்கின்றாள். கண்ணீர் விடாதே யப்பா! தாமோதரா! உத்தரவு தானா?'' என்று கேட்டாள். தாமோதரனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டதனால் அவன் எதுவும் பேசமாட்டாமல் “சென்று வாருங்கள். ராஜத்தைத் தாங்கள் புத்தியாக நடந்து வாழச்சொல்லுங்கள். முடிந்தால்........... உம்....இனி இந்த ஜென்மாவிலில்லை. தாங்களேனும் மறுமுறை வந்து போனால் சந்தோஷமாயிருக்கும். நல்லது சென்று வாருங்கள்; மாமி! நான் கேட்பதை வித்தியாசமாக எண்ணக்கூடாது. சமீபத்தில் எடுக்கப்பட்ட ராஜத்தின் புகைப்படமொன்று மட்டும் யான் வெகு ஆவலுடன் ஆசிக்கின்றேன். அதுவே எனக்கு ராஜத்தை யடைந்த இன்பத்தை யுண்டாக்கும். அதை அனுப்பமுடியுமா? மாமி!'' என்று கெஞ்சிக் கேட்டான்.

இதைக்கேட்ட ருக்மிணியும் கண்ணீர் பெருக்கியவாறு “அப்பா! நான் உன்னிஷ்டப்படியே செய்கிறேன்; கவலை வேண்டாம். நான் வருகிறேன். உடம்பு ஜாக்கிரதை; நான் உத்தரவு பெற்றுக் கொள்கிறேன்'' என்று கூறி உத்தரவு பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டு வந்து தன் காரில் அமர்ந்து வீடுவந்து சேர்ந்தாள்.

தாயின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்த ராஜம் அவளைக் கண்டதும் எதிர் சென்று "அம்மா! அத்தான் எப்படியிருக்கிறார்? தேகநிலை எவ்விதமிருக்கின்றது?" என்று வெகு ஆவலோடு வினவினாள். தன் மகளின் அன்பின் முதிர்ச்சியைக் கண்ட ருக்மிணி மனதிற்குள் வியந்தவாறு தான் சென்றதுமுதல் நடந்த சகல விஷயங்களையும் ஒன்று விடாது கூறி முடித்தாள்.

தன் தாயார் தன் காதலன்பால் காட்டிய அன்பையும் யோசனையையும் கண்டு மகிழ்ந்து, தன் காதலன் தனக்குக் கூறியனுப்பிய புத்திமதியைக் கேட்டு இன்பமும் துன்பமும் கொண்டாள். அதற்குமேல் எதுவும் பேசாமல் போய்விட்டாள். பின்னும் சற்று நேரத்திற்கெல்லாம் கண்ணபிரான் அங்கே வந்து சேர்ந்தார். இங்கு நடந்த ஒருவிஷயமும் அவரறிய மாட்டாராகையினால் அப்போது கலவரமொன்றுமின்றிச் சாதாரணமாகவே இருந்தார். அச்சமயம் தந்திச் சேவகன் ஒரு தந்தியைக் கொண்டுவந்து அவரிடம் கொடுத்தான். கண்ணபிரான் அதை உடனே வாங்கி உடைத்துப் பார்த்து "ஆ" என்று கூச்சலிட்டார். உடனே ராஜமும் ருக்மிணியும் "ஐயோ! என்னவோ தெரியவில்லையே! என்ன தந்தியோ! எங்கிருந்து வந்ததோ! என்ன காரணமாக இவர் அலறவேண்டும்?" என்று எண்ணியவாறு இவரருகில் வந்தார்கள். ராஜம் ஆங்கிலம் தெரிந்தவளாகையினால் தந்தியை எடுத்துப் படிக்கலானாள்.

தங்கள் குமாரத்தி மரகதவல்லியின் உயிர் இருப்பதும் தெரியவில்லை; அவள் இறந்ததும் தெரியவில்லை. பெரிய தடபுடலாக இருக்கிறது! உடனே வந்து பார்க்கவும்.

உண்மை நண்பன்.

இதைக் கேட்ட ருக்மிணி "ஆ! ஐயோ! குழந்தை தேக அசௌக்யம், வர இயலாதென வரைந்திருந்தாளே! கர்ப்பிணியாகிய அவளுக்கு என்ன நேர்ந்ததோ! என்ன செய்வேன்?" என்று அலறி விழுந்துவிட்டாள்.

5-வது அதிகாரம்.

மோகினிப் பிசாசு !

தத்தளிக்கும் ஜனத்திரளில் ஒருவர் மீதொருவராக விழுந்தடித்துக்கொண்டு "குத்து! கொல்லு! நசுக்கு! எங்கே அந்த ராஸ்கல்? அவனைச் சட்னி செய்துவிடுவதே சரி! தடி எடு! கம்பெடு" என்ற கோஷம் காதைச் செவிடுபடச் செய்கின்றது. ஸ்திரீகளெல்லாம் ஓடமாட்டாமல் தமது புருஷர்களைத் தேடியலைந்து தத்தளிக்கின்றார்கள். பெண்கள் கூட்டத்து மத்தியில் சில போக்கிரி ஆடவர்கள் புகுந்து அகப்பட்டது அதிர்ஷ்ட வசமென்று எண்ணிக் குழந்தைகளின் நகைகளையும் ஸ்திரீகளின் நகைகளையும் களவாடத்தொடங்கி விட்டார்கள். பெண்களெல்லோரும் "ஐயோ! களவு! களவு! கேட்பாரில்லையா!" என்று பெருத்த கூக்குரலிட்டுக் கதறுகிறார்கள். போலீஸ் வீரர்கள் கட்டுக்கட்டாய் ஆண் பெண் கூட்டங்களை என்ன பாடுபட்டுக் கலைத்தும் அடங்கும் பாடாகக் காணவில்லை. ஒருவர் பேசுவது ஒருவருக்குக் கேட்காமல் இரைச்சல் அண்டத்தை யளாவுகின்றது. நீந்தி யடித்து முட்டிக்கொண்டு வெளியே செல்லச் சிறு துரும்பு நகரும் வழியும் அகப்படாமல் திணறுகின்றார்கள். இந்த வைபவத்தில் எவனோ சோதாப்பயல் மின்சார விளக்கின் (மெயின் ஸ்விச்சை) பொத்தானை அழுத்தி விட்டான். "கோவிந்தா! கோவிந்தா!" குபீரென்று இருள் சூழ்ந்துகொண்டு விட்டது. களவாட வரும் தூர்த்தர்களுக்கு நல்லதோர் உதவிசெய்தது போலாயிற்று. ஏற்கெனவே இருந்த சத்தம் முன்னிலும் அதிகரித்து "ஐயோ! ஐயோ! அநியாயக் கொள்ளையே! கேட்பார் இல்லையா? இவ்வித ஆபத்து நேருமா! சங்கிலியை அறுக்கிறானே! ஐயோ! காது போய்விட்டதே! கம்மலைக் காதோடு கத்தரிக்கின்றானே! உயிர் போய்விட்டதே! உயிர் போய்விட்டதே! அடே சண்டாளா! மூக்கு! மூக்கு! விட்டுவிடடா! ஐயோ பாவி! என் தலையில் மயிருமில்லையடா! மொட்டைத் தலையை ஏன் தடவிப் பார்க்கிறாய்? என் தலையில் நகையில்லையடா! ஐயையோ! செத்தேன்; செத்தேன். திருட்டுத் தடியன் என் கழுத்து ருத்திராக்ஷத்தை அறுத்துவிட்டதோடு கழுத்

தையும் அறுக்கிறானே. விளக்கும் அவியவேண்டுமா!" என்று தாறுமாறான கூக்குரல் தலையை உடைக்கின்றது. சில துட்டர்கள் இளம்பாவையரருகில் வந்து அவர்களது கணவன்மார்போல் அன்பாய்க் கையைப் பிடித்து அணைத்து அழைத்துச்செல்ல முயற்சித்துப் பின்னர், அவர்கள் வேற்றுமனிதரெனத் தெரிந்து திட்டிக் கூக்குரலிட்டபின் விட்டுவிட்டுச் செல்கிறார்கள். இதற்கிடையில் சில சுருட்டுப் பிரியர்கள் தங்கள் கையிலிருந்த தீக்குச்சி முற்றும் கொளுத்தி வெளிச்சங் காட்டினார்கள். சைகில் கொண்டுவந்தவர்கள் சைகில் விளக்கை ஏற்றிக் காட்டுகின்றார்கள். இன்னும் சிலர் அங்குமிங்கும் ஓடி அருகிலிருக்கும் சோடாக்கடை விளக்குகளைக் கொண்டுவந்தார்கள். இதற்குள் போலீஸார் மின்சார விளக்கை ரிபேர் செய்யப் பார்க்கையில் அது கெடாது யாராலோ அணைக்கப்பட் டிருப்பதையறிந்து உடனே விளக்கை ஏற்றினார்கள். விளக்கு ஏற்றப்பட்டதும் பெண்களின் கிலி சற்று நீங்கிற்று. பாதி பேருக்குமேல் மேடை மீது ஏறிவிட்டார்கள். இத்தனை போராட்டத்தில் நமது மஞ்சுளவல்லி மூர்ச்சையாகிப் புஷ்பவல்லியின் கைமேல் சாய்ந்திருக்கின்றாள். இந்தச் சபையில் ஜனக்கும்பல் இவளைத் துகையல் செய்துவிடும்போல ஆய்விட்டது. புஷ்பவல்லி என்ன செய்வாள்! கைகால்கள் நடுக்கமுற்றுக் கையில் தாங்கியிருந்த மஞ்சுளாவை விட்டு விடுவாள்போல ஆய்விட்டாள். அவளுடைய நிலைமை மிகவும் தத்தளிப்பாயும் கவலைக்கிடமாயும் ஆய்விட்டது. அச்சமயம் ரங்கனாதன் மெல்லச் சமாளித்துக்கொண்டு இவர்களிருக்கு மிடம் வந்துசேர்ந்து "மணிவண்ணன் எங்கே?" என்றான். அவனைத்தான் பார்க்கவில்லை என்று புஷ்பவல்லி கூறி, "தம்முடன் கூட அமரவில்லையோ?" என்று கேட்டாள்.

இதுகேட்ட ரங்கநாதன் "நான் அவன் பக்கலில் முதலில் அமர்ந்தேன். பின்னர் எனக்கு டிக்கட்டுக்கொடுத்த செட்டியார் என்னை அழைத்தார். அங்குச் சென்று அவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அப்போதே இந்தக் கலபை உண்டாய் விட்டது. அவன் எங்கே காணவில்லையே! இந்தம்மாளுக்கு ஏன் மயக்கம் வந்துவிட்டது?" என்றான்.

புஷ்ப:—எனக்கும் தெரியாது. இவள் திடீரென்று மயங்கிவிட்டாள். இந்தக்கும்பலில் தாங்குவதே கஷ்டமாக விருக்கிறது. நாம் எவ்விதம் வெளிக்கிளம்புவது? இவர்களை வெளியேற்றினலன்றி உடம்பு தெளிவுறுதுபோல இருக்கிறது. நாம் முன்னல் செல்வோம்; அவர் வரட்டும். நீங்கள் வழிசெய்யுங்கள்—என்ருள். உடனே ரங்கநாதன் ஒரு சோடா வாங்கியுடைத்து அதை மஞ்சுளாவின் முகத்தில்தெளித்து வாயிலும் வார்க்கச் செய்தான். மஞ்சுளா சற்றுத் தெளிவுற்றுத் தானே நின்று, இந்த அமர்க்களத்தைக் கண்டு கலங்கியவாறு "அக்கா ! என் பிராணபதி வந்தாரா?" என்ருள்.

புஷ்ப—அம்மா ! உன் மயக்கம் தெளிந்ததா ? அவர் இன்னும் வரக்காணேம். ஒருகால் தானும் மேடைமேல் ஏறி இருக்கிருரோ என்னவோ ? நாம் செல்வோம். அவர் வரட்டும். இப்போது பாதி ஜனங்களுக்கு மேல் மேடையில் ஏறிவிட்டதால் நாம் மெல்ல வெளியேபோய் விடலாம்—என்று கூற ரங்கநாதன் வெகு ப்ரயாசையுடன் வழி செய்துகொண்டு விழுந்தடித்து அவ்விருவரையு மழைத்துக் கொண்டு வீதிக்கு வந்து சேர்ந்தான். மஞ்சுளாவோ தன் நாயகனின் செய்கையை இவர்கள் கவனிக்கவில்லை என்ற வரையில் தெரிந்து கொண்டாள். அவளுடைய மனது அவள் நாயகனின் மீதே சென்று போராடுகின்றது. "வந்த மனிதருடன் வீடு செல்லாவிட்டால் அதுவும் விகாரமாகும்" என்று எண்ணிப் பேசாதிருந்தாள்.

ரங்கநாதன் தான் முதலில் வந்த வண்டியில் இருவரையும் ஏற்றி "உங்கள் வீட்டில் முதலில் கொண்டுபோய் விட்டுவிட்டுப் பின்னும் வண்டி கொண்டுவந்து மணிவண்ணனைப் பார்த்து வருகிறேன்" என்று கூறி நேராக மணிவண்ணன் வீட்டிற்கு வண்டியை விட்டான். உடனே மஞ்சுளா இறங்கி உள்ளே சென்ருள். வீட்டில் துணைக்கு வேலைக்காரி யிருப்பதால் புஷ்பவல்லியும் தன் வீடு போவதாகச் சொல்லிக்கொண்டு போய்விட்டாள். அப்போது ஒரு மணி சுமாருக்கு ஆய்விட்டது. இன்னும் தன் நாயகன் வரவில்லையே என்று மஞ்சுளா வீதிப் பக்கமுள்ள ஜன்னலின் வழியாய்ப் பார்த்துக் கொண்டே இருக்கிருள்.

ரங்கநாதன் தன் வீட்டில் புஷ்பவல்லியை விட்டுவிட்டு மறுபடி யும் நாடகக் கொட்டகையை அடைந்து முற்றும் தேடிச் சுற்றிப் பார்த் தான். அங்கு ஜனத்திரளும் குறைந்துவிட்டது. உள்ளே சென்று பார்த்ததில் மேடையில் ஒரு மனிதரை யாவது வேறு சாமான் களாவது எதையும் காணுமல் ஜனங்களும் போலீஸாரும் "இதென்ன மாயவித்தை!" என்று ப்ரமித்து ஒன்றுந் தோன்ருது திகைத்துவிட் டார்கள். கொட்டகைக்குச் சொந்தக்காரன் தனக்குப் பேசிய குடிக் கூலி முழுமையும் கொடுக்காமல் அவன் ஏமாற்றிவிட்டதை எண்ணி வயிற்றிலும் வாயிலும் அறைந்து கொள்கிருன். உடனே கொட்ட கைக்காரனும் இன்னும் மற்ற சிலரும் ஒன்று கூடித் திருவொற்றி யூர் ராஜாராம் நாயுடுவுக்கு டெலிபோன் செய்து அவரை வரவழைத் தார்கள். நமது நிபுணரும் நடுநசியில் அங்குவந்து அவ்விடத்தில் நூதனமாக வந்த திரையையும் அதன் எழுத்துக்களையும் மேடையி லுள்ள சகல இடங்களையும் கூர்மையாகக் கவனித்தார். அவருக்கே ஒன்றும் தோன்றவில்லை. அவரும் வியப்படைந்தார்; தாம் முயன்று பார்ப்பதாயும் உறுதி சொல்ல முடியாதென்றும் கூறிச் சென்று விட்டார். மணிவண்ணனை இங்கே காணும்; ஒரு கால் வீட்டிற்குப் போய் விட்டானே என்னவோ? என்ற யோசனை யால் கொட்டகையில் ஓரிடம் பாக்கி விடாமற் பார்த்து விட்டு ரங்கநாதன் மணிவண்ணன் வீடு வந்தான்.

ஜன்னலில் உட்கார்ந்து தன் நாயகன் வரவை எதிர் நோக்கும் மஞ்சுளவல்லி மோட்டார் வந்ததைக் கண்டவுடன் தனது ப்ராண பதி வந்து விட்டதாக நிச்சயித்துக் கொண்டு பரபரப்புடன் வீதிக் கதவைத் திறந்து பார்த்தாள். வண்டியினின்றும் தனது உயிர்க் காதலனின்றி ரங்கநாதன் மட்டும் இறங்கி வந்ததைக்கண்டு செத்த வள்போலானுள். அதே தருணம் ரங்கநாதன் "மணிவண்ணன் வந்து விட்டானு?" என்று கேட்டான்.

அன்னிய ஆடவனுடன் ஒரு நாளும் பேசியறியாத மஞ்சுளா அன்று அன்னிய புருஷனென்பதையும் மறந்து "ஐயோ! இன்னும் என் பர்த்தா வரவில்லையே! அவர் கொட்டகையில் இல்லையா? வேறு எங்கு சென்றிருப்பார்? ஒரு கால் அந்தக் கும்பலில்

நசுக்குண்டு மூர்ச்சித்திருப்பரோ ?'' என்று துடித்த வண்ணம் கேட்டாள்.

இவளுடைய ஆழ்ந்த அன்பின் தன்மையையும், பதிவிசுவாசத்தையும் கண்ட ரங்கநாதன் வியந்து மகிழ்கிறான். மணிவண்ணன் இன்னும் வந்து சேரவில்லை என்றதும் ஒன்றும் தோன்றாது தவிக்கின்றான். அவன் எங்குச் சென்றிருப்பான் என்பதை யறியாமல் தியங்கிப் பின் மஞ்சுளாவுக்குத் தேறுதல் கூற வெண்ணி, "அப்படியொன்றும் நடந்திராது. அவனுடைய சினேகிதர் யாராவது வந்திருப்பார்கள். அவர்களுடன் பேசிக்கொண்டே போயிருப்பான். இன்னும் சில நிமிஷத்தில் வந்து விடுவான். அதைரியப்படவேண்டாம். இன்னும் ஒரு முறை சுற்றிப் பார்த்து வருகிறேன்'' என்று கூறி மீண்டும் மோட்டாரை விட்டுக்கொண்டு போய்விட்டான். மஞ்சுளா ஒன்றுமே தோன்றாதவளாய்க் கதவைத் தாளிட்டுக்கொண்டு முன்போலவே அமர்ந்தாள்.

இங்கிருந்து நாம் மணிவண்ணனைப்போய்க் காண்போம். நாடகக் கொட்டகையில் சென்று அமர்ந்த மணிவண்ணனை அன்று மாலையில் அவன் கடற்கரையில் கண்ட கன்னியாகிய மோகினி என்கிற பிசாசு பிடித்துக்கொண்டமையால் அவன் அதே எண்ணமாக உட்கார்ந்திருக்கும் தருணத்தில் அவன் பக்கத்திலேயே அந்த மோகினிப் பிசாசும் வந்தமர்ந்து விட்டதென்று முன்னரே தெரிவித்தோமல்லவா? அவனுடைய பக்கத்துச் சோபாவில் வெகு ஒய்யாரமாயும் குலுக்கிப் பிலுக்கி ஆடம்பர அலங்காரத்துடன் மனதைக் கவரக் கூடிய இயற்கை யழகு, செயற்கை யழகு ஆகிய இரண்டும் ஜொலிக்கக்காண்போர் மனத்தைக் காந்தம்போல் இழுக்கும் தன்மை வாய்ந்த அதிரூபலாவண்ய மோகன சிங்காரியாய் வீற்றிருந்த அந்த மின்னாளின் மேல் வைத்த விழியை வாங்காமல் உட்கார்ந்திருப்பவரில் நமது மணிவண்ணனும் ஒருவனானான்.

பெஞ்சு டிக்கட்டும், காலரி டிக்கட்டும் வாங்கிய கனவான்களில் சிலர் அவளருகில் உட்கார்ந்திருந்தால் இந்த அற்புத மாயா விநோத சுந்தரியைக் கண்டு களிப்புக்கொண்டு இமை கொட்டாமல் அவளைப்

பார்த்தபடியே இன்பமனுபவிக்கலாம் என்று ஆசைகொண்டு மறுதினம் சாப்பாட்டுச் செலவிற்காகக் கையிலிருக்கும் ரூபாயை அளித்துச் சோபாச்சீட்டுப் பெற்றுக்கொண்டு அருகில் வந்து உட்காரத் தொடங்கினார்கள். சிலர் கையிலும் காசு இல்லையாமையால் பக்கத்து மனிதரின் ஜேபியில் கையைவிட்டு அகப்பட்டதை எடுத்துச் சீட்டுப் பெற்றுக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். அதுவும் கிடைக்காத மூதேவிகள் உலாவச் செல்வதுபோல இறங்கிப் போலீஸ் புலிகளை ஏமாற்றி இங்கு வந்து தூரத்தில் நின்று பல்லிளித்து மகிழ்கிறார்கள். அங்கு பிஸ்கேட், சாக்லெட் முதலியன விற்கும் மனிதரும் இந்தப் பக்கத்தில் கண்ணும், கொட்டகை முற்றும் கேட்கும்படிக் கூச்சலிட்டு விற்பதுமாக அலைகிறார்கள். அந்த அணங்கு பிஸ்கெட்டு வாங்க பிஸ்கட்காரனை அழைத்தது தான் தாமதம், "ஆ! பிஸ்கேட்டாம்மா! இந்தாருங்கள். நீங்கள் விலை கேட்கவேண்டுமா! ஓங்களைப்போல தர்மதேவதைகளின் அன்பு இருந்தால் போதும்! சாப்பிடுங்கள்" என்று கூறிக் கையில் வந்தஅளவு வாரிக் கொட்டிப் பல்லை இளிக்கிறான் பிஸ்கட்காரன்.

நமது மணிவண்ணன் எத்தனையோ வழியில் மனதை யடக்கிப் பார்த்தான்; அடங்கவில்லை. அவன் கண்கள் அந்த திக்கையே நாடுகின்றன. அதைப் பக்கலிலிருக்கும் ரங்கநாதனும் அவன் பாரியாள், மஞ்சுளா முதலியோர் பார்த்துவிடப் போகிறார்களே என்ற அச்சம் வேறு அவனைப் பாதிக்கின்றது. எனினும் அவள் பக்கம் பார்க்காமல் இருப்பதற்கு அவனால் சாத்யப்படவில்லை. ரங்கநாதனைக் கொட்டகையின் செட்டியார் அழைத்தார். அவன் எழுந்து சென்றது இவனுக்குப் பெரிய சந்தோஷத்திற்கும் அனுகூலத்திற்குமிடமாயிற்று. அந்த ஆரணங்கு புன்னகை தவழ்ந்த வதனத்துடன் வீற்றிருக்கும் காட்சியைக் கண்டு அவன் ஆநந்தித்துக் கொண்டிருக்கையில் இந்த கலபை யுண்டாகிக் குழப்ப மேற்பட்டுவிட்டது. உடனே ஒருவர் மீதொருவர் விழுந்தடித்துக் கொண்டு ஓடத் தலைப்பட்டதும் அம்மாது நடுங்கிப் பயந்தவள் போலக் கூச்சலிட்டு "ஐயோ! அம்மா!" என்று தத்தளித்து நின்றாள். மணிவண்ணனும் இவள்மீது ஜனங்களை நெருங்கவிடாது தனது கைகளை அண்டை கட்டுவதுபோல் கட்டிக்கொண்டு நின்றான். அதே நேரத்தில் தான் நமது மஞ்சுளா இவனைப் பார்த்தது. உடனே சற்று நேரத்திற்கெல்லாம் அந்தப் பெண்மணியுடன் கூடவந்தவர்கள் மெல்ல வழி செய்துகொண்டு அவளை அழைத்துக்கொண்டு போனார்கள். அந்தப் பெண் மீதே சித்தம் பதிந்த மணிவண்ணன் சொக்குப்பொடி போடப்பட்டவனைப்போல அவர்கள் பின்னாலேயே நடந்து சென்றான்.

இனாம்! இனாம்!

முற்றிலும் இனாம்!

'C' ரிஜிஸ்டர்! 'C' ரிஜிஸ்டர்!

டைம்பீஸ் டைம்பீஸ்

இனாம். இனாம்.



எங்களின் " தாரா " லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை வாங்குகிறவர்களுக்கு " C " டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டையலின் பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது. முந்துங்கள்.

காப்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ 265, மதராஸ்.

ஒரு மாதம்

பாதிவிலை! . . . பாதிவிலை!

வரையிலும்

அசல் விலை ரூபாய் 14.

பாதி விலை 7



22 காரட் ரோல்டு கோல்டு கைகெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப்படும். பாதிவிலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டு பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

ஸ்வான் ஹவுஸ்.

தபால் நெ, 508, பி, டி, மதராஸ்.

" கிருஷிகன் "

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:....

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு
பேன்ஷண்ட் விவசாய டேப்டி டைரேக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும் கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் " கிருஷிகனு "க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

" கிருஷிகன் " பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினல் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் " கிருஷிகன் " ஆபீஸ்,
" ஜகந்நாதபாக் " சைதாப்பேட்டை, சென்னை.

கம்மபாலன்.

தமிழ் மாதப்பதிப்பு. கிராமவாசிகளுக்கு அவசியமானது. வருஷ சந்தா ரூ. 1 தான். விளம்பரங்கட்குத் தகுந்த சௌகரியமுண்டு. மாதிரிப் பிரதி இனம். கம்மபாலன் புக்டிபோவில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் இயற்றிய நாவல்களும் மற்றெல்லாவித தமிழ்ப் புத்தகங்களும் கிடைக்கும். விவரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

R. வேங்கடசாமி நாயுடு,
" கம்மபாலன் " பத்திராதிபர், திருத்தங்கல்.

கெட்டி சாயம் ! உயர்ந்த உடை !! விலை நயம் !!!

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.
அளவு 18 × 2¾ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-8-0 **2-வது ரகம்** ரூ. 4-8-0
பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-8-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்

18 × 2¾ விலை ரூ. 12-8-0
ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு.—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

"ஜகன்மோகினி"யில்

வெளிவந்த நாவல்கள்.

மலர் I. ஸ்ரீமான் வடூவூர் கே. துரைசாமி அய்யங்கார்

எழுதிய

	காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை.

கனக சபை	ரூ.	1	8	0
கோகிலம்	ரூ.	0	6	0

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை.

மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
	சண்பக விஜயம்	ரூ.	1	12	0

"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன்	ரூ.	2	0	0
சண்பகவிஜயம்	ரூ.	1	8	0

"ஜகன்மோகினி" ஆபீஸ்
26, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்ரீமான்-வடுவூர் கே. துரைசாமி ஐய்யங்கார்

எழுதியவை

	ரூ.	அ.
பூர்ண சந்திரோதயம் 1,2,3,4	7	8
மாயாவிநோதப் பரதேசி 1,2	5	0
மதனகல்யாணி 1,2,3	4	8
காளிங்கராயன் கோட்டை ரகசியம் 1,2	4	0
கும்பகோணம் வக்கீல் 1,2	3	0
மேனகா 1,2	3	0
விலாஸவதி 1,2	3	0
பாலாமணி	2	8
சௌந்தரகோகிலம் 1,2,3	6	0
வஸந்த மல்லிகா	1	8
வித்யாஸாகரம்	1	4
திவான் லொடபடசிங் பகதூர்	0	12
மாணிக்க வாசகர்	0	8

வத்ஸா கம்பெனி,
திருவல்லிக்கேணி.

Except the title page the rest is printed in "the Tata Press" Madras.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதியவை

சண்பக விஜயம்

இந்த நாவல், "இது சிறந்த நாவல்" என்று நாவல் படிப்பதில் ஆர்வமுடையார் புகழத்தக்கபடி நாவலுக்குரிய இலக்ஷணங்களுடன் அமைந்திருக்கிறது. இதனைப் படிக்கத் தொடங்கினால் முடிக்காமல் புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது. அல்லது கேட்டாலும் அப்படியே யிருக்கும். இது பால விநோதினிப் பத்திராசிரியராகிய வரகவி-திரு. அ. சுப்ரமண்ய பாரதியார் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச்சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும், நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தம குணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேக மேற்கோள்களுடன் விளங்க வைத்திருக்கிறபடியால், இந்த நாவல், கேவலம் நாவல் வகையில்எண்ணிப் புறக்கணிக்கத் தக்கதல்ல; போற்றத்தக்கதேயாம்.

மேலும் இதில் கூறியதையே கூறிப் படிப்பவர் மனத்திற்கு அருவருப்பைத் தரும்படியான சந்தர்ப்பம் எங்கும் காணக்கிடைக்காது. எந்தச் சம்பவமும் ஆச்சரியத்தை யுண்டாக்கக் கூடியதாயும், அறிவைப் புகட்டக் கூடியதாயும், தீயவருடைய மனதைத் திருத்தக்கூடிய வகையிலும் சிறந்து நிற்கும். ஆதலால் இதில் ஒரு புத்தகம் ஒவ்வொருவருடைய கையிலும் பூஷணமாக விளங்க வேண்டியது இன்றியமையாததாகும். டிம்மி 40-பாரங்களும் அழகிய சித்திரப்படங்களும் கொண்டது. விலை ரூ. 1—12—0.

வைதேகி

இதில் கதா நாயகியின் மன உறுதி, கற்பின் மாட்சி, உன்னத குணங்களின் உயர்ச்சி முதலியனவும் கதா நாயகி நாயகருடைய தெய்வீகக் காதலின் இலக்ஷணம், கீரைக்கார காமாக்ஷியின் உயரிய குணங்கள், துப்பறிபவரின் திறமையும், லொள்ளுதுரை, லோகாற்புதம் ஜமீந்தார், பொக்கைக் கிழவி, மார்வாடி, சாரங்கபாணி, ஊரளந்தான், அடியளந்தான் முதலியவர்களின் ஹாஸ்ய விநோத அற்புதச்செய்கைகளும் இன்னும் மற்ற ரஸங்களும் நிரம்பப் பெற்று ருசிகரமாக விளங்குகின்றன. இது அநேக பத்திரிகைகளாலும் பிரமுகர்களினாலும் மதிக்கப்பெற்றது. அழகிய படங்களுடன் 540-பக்கங்கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூபாய். 2—8—0.

வத்ஸா கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

விலை அணா பத்து.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் டிபோ,

7. தம்புச்செட்டி வீதி, சென்னை.

Edited and Published by V. M. Parthasarathy Iyengar,

PRINTED AT THE 'NOBLE PRESS,' TRIPLICANE, MADRA[illegible]